Registered as a news paper.

இலவசப் பிரதி

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

வெளிநாட்டு அழைப்புகள் 1 நிமிடம் 20/=

CANADA, SWISS, UK, GERMANY, ITALY, FRANCE, AMERICA

மேலும் பல நாடுகளுக்குச் சேவையைப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

சேவை திங்கள் முதல் வெள்ளி வரை. (052)

WINTO இல.06. நவீன சந்தை, (அண்ணா கோப்பிக் கடைக்கு மேல்) யாழ்ப்பாணம்.

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 16 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 26 (02.12.2002) திங்கட்கிழமை இதழ் : 62



இன்றைய பேச்சுக்களில் கலந்துகொள்ளும் புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் குழு.

## இன்றைய ஒஸ்லோ பேச்சுகளில் உபகுழுக்கள் குறித்து மீளாய்வு!

(ஒஸ்லோ)

அரசாங்க மற்றும் புலிகள் தரப்புப் பிரதிநிதிகளிடையே இன்று ஒஸ்லோவில் ஆரம்பமாகவுள்ள பேச்சுவார்த்தைகளின்போது அரசியல் விவகாரங்களைத் தவிர வடக்கு-கிழக்கு பகுதிகளின் பாதுகாப்பு ஒழுங்குகள் குறித்தும் ஆராயப்படும் என அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோவில் உள்ள ராடிஷன் பிளாசா ஹோட்டலில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அமைச்சர் பீரிஸ் இத்தகவலை வெளியிட்டார்.

தாய்லாந்தில் இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின்போது, அரசியல் விவகாரங்கள் பற்றிப் பேச ஒரு துணைக்குழு அமைக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுவுக்கு தலைமை தாங்கும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இதற்குத் தலைமை ஏற்கிறார். அமைச்சர் ரவூப் ஹக்கீம் அதன் உறுப்பினராக இருப்பார். இந்தக் குழுவின் பணியை இப்போது ஒஸ்லோவில் தொடங்க இருக்கிறோம். அமைதி வழியை எதிர்கொள்வது அதன் தலையாய பணி.

இயல்பு நிலைக்குத் திரும்பும் நோக்கில் இராணுவச் செயற்பாடுகளைக் குறைப்பதற்காகத் தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டாம் சுற்றுப்

(10ஆம் பக்கம் பார்க்க

உள்ளே.. பாலாவின் லண்டன் சிறப்புரை

# முஸ்லிம் காங்கிரஸில் பெரும் குழப்பம்;

# ஹக்கீமை கவிழ்க்க அதாவுல்லா முயற்சி!

## ஒஸ்லோ பயணத்தை இடைநிறுத்தி நாடு திரும்புகிறார் அமைச்சர் ரவூப்



அதாவுல்லா

(கொழும்பு நிருபர்)

**முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்திலிருந்து அமைச்சர் ரவூப் ஹக்கீமை அகற்ற - நாடாளுமன்ற உறுப்பினர், தவிசாளர் அதாவுல்லா, கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் ஹஸ்ரத் ஆகியோர் தலைமையில் பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து - இருவரையும் கட்சியை விட்டு நீக்கிய அமைச்சர் ஹக்கீம், தனது ஒஸ்லோப் பயணத்தை இடைநிறுத்தி இன்று கொழும்பு திரும்புகின்றார்.**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொறுப்பிலிருந்து வரும் அமைச்சர் ரவூப் ஹக்கீமிற்கு எதிராகக் கட்சிக்குள் நிலவிய எதிர்ப்பலை நேற்று வெடித்துக் கிளம்பியது.

கண்டியைச் சேர்ந்த ரவூப் ஹக்கீம், கிழக்கைத் தலைமையகமாகக் கொண்ட முஸ்லிம் காங்கிரசுக்கு எவ்விதம் தலைமை தாங்க முடியும் என அவருடன் சர்ச்சையிட்டு வந்த - அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் தவிசாளருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா - ஹக்கீமைத் தலைமைப் பொறுப்பிலிருந்து அகற்ற நேற்றுத் திடீரென பெருமுயற்சியொன்றில் இறங்கினார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ‘தாருஸ்லாம்’ இல் யுத்த களேபரம்; அதாவுல்லாவைத் தாக்கவும் முயற்சி!

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ்கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து அமைச்சர் ரவூப் ஹக்கீமை அகற்றுவதற்கு கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அதாவுல்லாவும் கட்சியின் செயலாளர் டாக்டர் ஹஸ்ரத்தும் முயற்சித்ததன் தொடராக நேற்றிரவு கொழும்பில் கட்சியின் தலைமையகமான ‘தாருஸ்லாம்’ இல கட்சியின் உயர்பீடம் கூடியது.

முஸ்லிம் காங்கிரஸ் உதவித் தலைவர் மஜீத் தலைமையில் கூடிய இக்கூட்டத்திற்கு ஹக்கீமுக்கு ஆதரவானவர்கள் முதலில் வருகை தந்திருந்தனர்.

பின்னர் அதாவுல்லாவும், டாக்டர் ஹஸ்ரத்தும் அங்கு வந்தபோது பெரும் பதற்றம் தோன்றியது.

இருவரையும் தாக்குவதற்கு ஹக்கீம் ஆதரவாளர்கள் முயன்றனர். ஆனால் இருவரும் உடனடியாக அங்கிருந்து வெளியெறி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களின் எதிர்காலம் குறித்து பேசுவதைக் குழப்பும் முயற்சி!

### அமைச்சர் ஹக்கீம் விபரிப்பு



ஹக்கீம்

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக ஒஸ்லோவுக்கு வந்துள்ள நேரத்தில் அதாவுல்லா, ஹஸ்ரத் இருவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டி வந்துள்ளதென அமைச்சர் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பேச்சுக்கள் நடந்து கொண்டிருக்கிற பொழுது முஸ்லிம்களின் எதிர்காலம் குறித்து ஆராயப்படும் - இச்சந்தர்ப்பத்தில் (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



உது தலைமைத்துவப் பிரச்சினையில்லை, ஹக்கீமின்ர தலை தப்பிற பிரச்சினை....

## பூநகரியில் சரணடைந்த இரு இராணுவச் சிப்பாய்கள்!

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் மேலும் இரண்டு இராணுவச்சிப்பாய்கள் நேற்று முன்தினம் சரணடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரி கடற்கரைப் பிரதேசத்துக்கு வந்தடைந்த மேற்படி இரண்டு இராணுவச் சிப்பாய்களும் அப்பகுதிக்குப் பொறுப்பான விடுதலைப்புலிகளின் பொறுப்பாளரிடம் சரணடைந்துள்ளனர். மிகவும் களைப்படைந்த நிலையில் காணப்பட்ட இவர்கள் இராணுவத்தை விட்டுத் தப்பிவந்ததாக தெரிவித்தனர்.

### சமாதானப் பேச்சுக்களில்

## இந்தியத் தலையீட்டைக் கோரி அநுரா குழு புதுடெல்கி விரைவு

சமாதான முயற்சிகளில் இந்தியத் தலையீட்டை வலியுறுத்தி பொதுஜன ஐக்கிய முன்னணித் தூதுக்குழுவொன்று இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயைச் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தவுள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில் இந்தியா தீவிர கவனம் செலுத்த வேண்டுமென பொதுஜன ஐக்கிய முன்னணியின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையிலேயே இந்தியப்பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயுடனான இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர, சரத் அமுனுகம ஆகியோரே வாஜ்பாய் மற்றும் சோனியா காந்தி ஆகியோரைச் சந்திப்பதற்காக இந்தியா சென்றுள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



பிரதமர் ரணிலின் விசேட தூதுவராக யாழ். வந்திருந்த ஜெனரல் சேர்.மைக்கல் ரோஸ் கொழும்பில் இராணுவத் தலைமையகத்தில் உயர் படை அதிகாரியால் வரவேற்கப்படும் காட்சி.

SERENDIB விமான சேவை

எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!

J/FT/P- 021 - 2223916, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 0777-517019

(சி-148)

## இன்றைய நாள் இனிய நாள்

**02-12-2002 - திங்கட்கிழமை**

**சித்திரபானு வருடம் கார்த்திகை மாதம் - 16 ஆம் திகதி**

**திதி** :- அபரபட்ச திரயோதசி மாலை 5. 52 வரை அதன்மேல் சதுர்த்தசி
**நட்சத்திரம்** :- பி.ப 2.27 வரை சுவாதி அதன்மேல் விசாகம்
**ராகுகாலம்** :- 7.45 - 9.15
**சுபநேரம்** :- 12.15 - 1.45

**மேடம்** :- உடனலம், உளனலம் நன்று, சுபமங்கள வைபவங்களில் பங்கு, உளப்பூரிப்பு, கல்வி முன்னேற்றம், வியாபர முன்னேற்றம்.

**இடபம்** :- உள மகிழ்ச்சி, பொருள் வரவு, சுபமங்கள வைபவங்களில் பங்கு, உடல் குளிர்ந்த உணவு, விதம்விதமான ஆடை அணிவதில் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மிதுனம்** :- உளநலக் குறைவு, புத்திரர்கள் அமைதி பேணுவது நன்று, கீர்த்தி பங்கம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை.

**கர்க்கடகம்** :- மாதா சுகக்குறைவு, வீட்டில் செலவு, பொருள் வரவு சிக்கல், கல்வி முன்னேற்றம், வியாபாரமுன்னேற்றம்.

**சிங்கம்** :- மனதில் உற்சாகம், எடுத்த காரியம் வெற்றி, ஆடைஆபரண பலன், சுபமங்கள வைபவங்களில் பங்கு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- பணவரவு, சேமிப்புத்திட்டம் இல்லை, பெண்களால் சண்டை, வாக்குவாதம், கல்வி முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்**
**அவர்களின் சகோதரரின் புத்திரர்**
**இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- உடனலம் உளனலம் நன்று, தெய்வவழிபாடு, சமய நூல் பாராயணம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- மன அடக்கம் தேவை, தேவையற்ற மனஸ்தாபம், எடுத்த காரியம் தடை, வீண்செலவு, கல்வி சமநிலை, வியாபாரம் சமம்.

**தனு** :- வீட்டில் உளப்பூரிப்பு, சுபமங்கள வைபவங்களில் பங்கு, தெய்வ வழிபாடு, சமய நூல் பாராயணம், கல்வி முன்னேற்றம், வியாபர முன்னேற்றம்.

**மகரம்** :- செய்தொழில் முன்னேற்றம், சமூக சேவையில் பங்கு, மரியாதை, சுபகாரியங்களில் பங்கு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- பிதா தேககசுகக்குறைவு, வைத்தியச் செலவு, எதிரி நலம் பெறுதல், தேவையற்ற பிரச்சினை, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- மனச்சஞ்சலம், தூரப்பிரயாணம், புதிய காரியங்கள், புதிய ஒப்பந்தங்கள் ஆகியவை தவிர்க்கவும், கல்வி முன்னேற்றம், வியாபாரமுன்னேற்றம்.

# கிளிநொச்சி விவசாய பீடமருகிலேயே பொறியியல் பீடத்துக்கு நிலம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் கிளிநொச்சியில் விவசாய பீடத்துக்கு அண்மையில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

மேற்படி செயற்திட்டத்துக்கான ஆரம்பத்திட்டமிடல் வேலைகள் அனைத்தும் ஏற்கனவே ஆரம்பிக் கப்பட்டுள்ளன. இப்புதிய கற்கைப் பீடத்திற்கான கட்டடங்கள் கிளி நொச்சியில் ஏ-9 வீதிக்கு அண்மை யாக அமைக்கப்படவுள்ளன. கிளி நொச்சியில் விவசாய பீடத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் நிலப்பகுதிக்கு அருகாமையிலேயே பொறியியல் பீடத்துக்கும் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

அனேகமாக அடுத்த ஆண்டு பொறியியற் பீடத்துக்கான நிர்மா ணப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க)

## பளை மத்திய கல்லூரி ஜனவரியில் சொந்த இடத்தில்

(மீசாலை)

அடுத்த ஆண்டுமுதல் பளை மத்திய கல்லூரியைச் சொந்த இடத் தில் மீள இயக்குவதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, தென் மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

தற்போது இப்பாடசாலை புலோலி றோமன் கத்தோலிக்க பாடசாலையி லேயே இயங்கி வருகிறது. கட்டடப் பணிகள் விரைவில் பூர்த்தியடைந்த தும் ஜனவரி மாதம் முதல் கல்லூரி யைச் சொந்த இடத்தில் இயங்கு வதற்குத் தேவையான சகல நடவ டிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்தார். (25)


**D.சேனாதிராஜா அன் சன்ஸ்**

**கண் பரிசோதித்துக்**
**கண்ணாடி வழங்குமிடம்.**
**செயற்கைப் பற்கள் கட்டுமிடம்.**
**மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்யுமிடம்.**

*எதிர்வரும் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு மூக்குக் கண்ணாடிகள், செயற்கைப் பற்கள், கிளிப் அனைத்திற்கும் 25% விசேட விலைக்கழிவுகளை வழங்கத் தீர்மானித்துள் ளோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். மேலும் 1500/- ரூபாவுக்குமேல் மூக்குக் கண்ணாடிகளைக் கொள்வனவு செய்பவர்களுக்கு இலவசமாக ஓர் SUN GLASS வழங்கப்படும்.*

உங்கள் கண்களைத் தானம் செய்யுங்கள்.
உங்களுக்குப் பின்
உங்கள் பொன்னான கண்கள்
இன்னுமொரு ஜீவனுக்குப் பயன்படட்டும்.

**D.சேனாதிராஜா அன் சன்ஸ்**

**இல. 18A, யாழ். பஸ் நிலையம்,**
**(பஸ் நிலையத்தில் கிழக்குப் பக்கமாக**
**உள்ள கடைகள் வரிசையில்)**
**யாழ்ப்பாணம்.**

**உரிமையாளர்**
**சே.ஆனந்தராஜா.**

(053)


### அரியாலை, பூம்புகார் பாடசாலைகள் இடமாற்றம்

(அரியாலை)

அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, பூம்புகார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியன கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் தபாற்கட்டைச் சந்தியில் உள்ள ஒரு வீட்டிற்கு இடமாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகின்றன.

1995 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையை அடுத்து இடம் பெயர்ந்த இரு பாடசாலைகளும் - கடந்த 2 வருடங்களாக கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

அரியாலை கிழக்குப் பகுதியில் உள்ள மேற்படி இரு பாடசாலை களினது கட்டடங்களும் முற்றாகச் சேதமடைந்துள்ளன. (55)

### மாகாண மட்ட ஆங்கிலப் போட்டியில் தெரிவு

(வடமராட்சி கிழக்கு)

வட-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் நடாத்திய மாகாண மட்டத்திலான ஆங்கிலத்திறன் போட் டியில், பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலையைச் சேர்ந்த இரு மாணவிகள் முதலி டத்தையும் ஒரு மாணவி இரண்டாம் இடத்தையும் பெற்று தேசிய மட்டத் திலான போட்டிக்குத் தெரிவாகினர்.

தரம்-10 இல் ஆங்கிலத்திறன் போட்டியில் செல்வி அன்ரனி ஜசிக்கா அந்தோனிப்பிள்ளை முத லாம் இடத்தையும், தரம்-9 ஆங்கில சொல்வதெழுதல் போட்டியில் செல்வி அன்ரனி ஜயந்தா அந்தோ னிப்பிள்ளை முதலாம் இடத்தையும், தரம்-7 ஆங்கில சொல்வதெழுதல் போட்டியில் செல்வி கார்த்திகா சக்திவேல் இரண்டாம் இடத்தையும் பெற்று தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவாகினர். (17)


**இதோ மீண்டும் யாழ்.மண்ணில்...**
**எமது நம்பிக்கை நாணயம் மிகுந்த சேவை..!**

**EQUIP UNIT TRUST**



- தொழில்நுட்ப வல்லுநர்களின் கைவண்ணத்தில் உருவான உயர்தர உருக்குத் தளபாடங்கள எமது ஸ்தாபனத்தில் உருவாக்கப்பட்டு விற்பனையாகின்றன.
- வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்ப அவர்கள் தரும் உரு அமைப்பின்படி (DESIGN) குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
- பாடசாலைகள், கல்வி , கல்விசார் நிறுவனங்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

*எமது உற்பத்திப் பொருட்கள்*

- STEEL CUPBOARDS
- VARIETIES of TABLES
- BOOK SHELVES
- STEEL CABINET (for office use)
- COMPUTER TABLE (Wood & Steel)
- FILE RACKS
- CASH BOX

***Reliable Services & Repairs of***
Type Writers, Roneo Machines, Roneo Printings
Computer stencil cuttings
**Above Services are done by us**

**E.U.T**
**No.249, K.K.S. Road,**
**Jaffna**
**T.P.0777 168128**
**(Opposite Jaffna Hindu College)**

(சி-250)



**சிறு விளம்பரம்**

**மணமகன் தேவை**

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 36 வயதுடைய திரு வோண நட்சத்திரம், செவ்வாய் தோஷமற்ற பெண்ணிற்கு, மண மகன் தேவை. அரச உத்தியோ கத்தர், வெளிநாட்டில் P/R உடை யோர் விரும்பத்தக்கது. சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும். விளம் பர இல.04 மே/பா. நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-246)

**நிறஞ்சனாஸ் சங்கானை**
அஜித்குமார், வசுந்தராதாஸ், மீனா நடித்த
**சிட்டிசன்**
காட்சி நேரம்:
11.00, 2.45, 6.00
(சி-187)

**ராஜா**
**யாழ்ப்பாணம்.**



நான்காவது வாரமாக
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
**வில்லன்**
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
இயக்கம்: K.S.ரவிக்குமார்.
(சி-151)

# இன்றைய பேச்சுக்களில் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு குறித்தும் ஆராயப்படும்!

## நோர்வே விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம்

(ஒஸ்லோ)

நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் இன்று ஆரம்பமாகவுள்ள மூன்றாவது சுற்று சமாதா



னப் பேச்சுகளில் இனப்பிரச்சினைக்கான இறுதி அரசியல் தீர்வினைக் காண்பது தொடர்பாக அரசு - புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் ஆராய்வர் என நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெறும் பேச்சுக்களில் இடம்பெறவுள்ள முக்கியமான விடயங்கள் குறித்து வெளிநாட்டுச் செய்தி ஊடகம் ஒன்றுக்கு இவர் பேட்டியளித்துள்ளார். இப்பேட்டியிலேயே சொல்ஹெய்ம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இந்தப் பேச்சுக்களின் போது புரிந்துணர்வு உடன்பாட்டை மீளாய்வு செய்வது தொடர்பாகவும் பேசப்படவுள்ளதாகக் கூறினார். கடந்த வருடத்தில் கூட, யுத்தத்தால் 2 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். இந்த அழிவுகள், இழப்புக்களைப் புரிந்துணர்வு உடன்பாடு இடைநிறுத்தியுள்ளது.

போர்நிறுத்த உடன்பாட்டை அமுல் செய்வதில் இரண்டு தரப்புக்களுக்குமே நிறையப் பிரச்சினைகள் இருக்கின்றன. அரச, புலிகள் தரப்புத் தலைமைத்துவங்களின் நேரடியானதும் இறுக்கமானதுமான கட்டுப்பாடுகளால் இலங்கையில் கொலைகள் நடப்பது நிறுத்தப்பட்டிருக்கின்றது.

புரிந்துணர்வு உடன்பாட்டிலுள்ள நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்க்க - உடன்பாட்டை மீளாய்வு செய்வது குறித்து ஒஸ்லோவில் ஆராயப்படும். அத்துடன் இப்போதுள்ள முக்கிய பிரச்சினைகளான, உயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஒஸ்லோவில் ஆராயப்படலாம்.

இவற்றைவிடவும் இனப்பிரச்சினைக்கு இறுதியான அரசியல் தீர்வைக் காணும் நீண்ட பேச்சுக்களுக்கே ஒஸ்லோவில அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் எனவும் சொல்ஹெய்ம் மேலும் தெரிவித்தார்.

இன்றுமுதல் 5 ஆம் திகதி வரை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான அரசுத் தரப்புக் குழுவுக்கும், கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தலைமையிலான புலிகள் தரப்புக் குழுவுக்கும் இடையில் பேச்சுக்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பகுதி நேர ஆங்கில ஆசிரியர் விண்ணப்பம் கோரல்

வடமராட்சிக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் பணிபுரிவதற்கு பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த (சாதாரண தரத்தில்) ஆங்கிலத்தில் விசேட சித்தி (D) அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தி (C)யும், க.பொ.த (உ/த) 3 பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களும், இளைப்பாறிய - ஆனால் 62 வயதிற்கு மேற்படாத அரச உத்தியோகத்தர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 12 ஆம் திகதியாகும். தெரிவுப் பரீட்சை 14 ஆம் திகதி நடைபெறும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# வவுனியாவில் கண்ணிகளை அகற்றும் நடவடிக்கைகளில் சுவிஸ் அமைப்பு!

## உள்ளூர் இளைஞர்களும் பணியில்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இந்த வாரம் முதல் சுவிற்சர்லாந்து நாட்டு கண்ணிவெடி அகற்றும் அமைப்பு ஒன்று, கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளது.

சுவிற்சர்லாந்து நாட்டு அரசாங்கத்தின் உதவியுடன் செயற்படும் எஸ்.டி.எஸ் என்ற அமைப்பே கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபடவுள்ளது. இந்த அமைப்பு கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளில் உள்ளூரில் இருந்து தெரிவு செய்யப்பட்டு, பயிற்றப்பட்டவர்களையும் பணியில் ஈடுபடுத்தவுள்ளது.

இதற்காக - கண்ணிவெடிகள் உள்ள பகுதிகளை இனங்கண்டு, மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக 10 பேருக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களில் ஒருவர் பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபடுவதற்காக 32 இளைஞர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த வாரம் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட சுவிஸ் நாட்டு தூதரக அதிகாரி, இந்தக் கண்ணிவெடி அகற்றும் பணி, தனியே வவுனியா மாவட்டத்துக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்படமாட்டாது என்றும், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சிப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

## பொலிஸ் மா அதிபரின் உத்தரவு எனக்கூறி

# மட்டு. ஊடகவியலாளர் வீடுகளில் இனந்தெரியாத நபர்கள் விசாரணை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் ஊடகவியலாளர்களின் வீடுகளுக்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் சிலர் - ஊடகவியலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப விபரங்களைத் திரட்டிச் சென்றுள்ளனர்.

மட்டக்களப்பிலுள்ள ஊடகவியலாளர் ஜி.நடேசனின் வீட்டுக்குக்குச் சென்ற மூவர், மட்டக்களப்பிலுள்ள ஊடகவியலாளர்களின் விபரங்களைப் பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பேரில் திரட்டி வருவதாகவும் கூறியுள்ளனர். அத்துடன் அவர் இல்லாத நேரத்தில் குடும்பத்தினரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

பின்னர், ஊடகவியலாளர் துரைரத்தினத்தின் வீட்டிற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டவர்கள், தம்மைப் பொலிசார் என அறிமுகப்படுத்திக் கொண்டு சில விபரங்களைக் கோரியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து, மட்டக்களப்பு பொலிஸ்நிலையத்துடன் ஊடகவியலாளர்கள் தொடர்பு கொண்டு விசாரித்தபோது, பொலிஸ மா அதிபரிடமிருந்து தமக்கு எந்த அறிவுறுத்தலும் கிடைக்கவில்லை என்றும், யாரையும் தாம் விசாரிக்க அனுப்ப வில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் பொலிஸ் மா அதிபருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் ஊடகவியலாளர்களின் வீடுகளுக்குச் சென்று மறைமுகமான மிரட்டல்கள், அச்சுறுத்தல்களை விடுப்பது கவலைக்குரியதென்றும், இந்த நிலையைத் தொடராது, தடுத்து நிறுத்துவதற் கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொலிஸ் மா அதிபரிடம் கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் கேட்டுள்ளது.

# சமாதான முயற்சிகளில் இந்தியா பங்கேற்க வைக்க தொடர்முயற்சி

## மிலிந்தவின் பயண நோக்கமும் அதுவாம்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக நடைபெறும் பேச்சுககளில இந்தியா கொணடுள்ள நிலைப்பாட்டை மாற்றியமைக்கும் முயற்சிகளில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

அண்மையில் ஒஸ்லோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில், இந்தியாவைப் பங்கேற்கவைக்க, இலங்கை அரசு பலத்த முயற்சிகளை எடுத்திருந்தது. அமைச்சர் மிலிந்த மொறகொட, நேரடியாக புதுடில்லிக்குச்சென்று, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங்குடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

அத்துடன், மாநாடு தொடங்க முதல் நாள் இரவும், ஒஸ்லோவில் உள்ள இந்தியத் தூதுவர் கோபால கிருஷ்ணகாந்தியுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சுக்களை நடத்தியிருந்தார். ஆனாலும் இந்தியாவை இம்மாநாட்டில் பங்கேற்க வைக்கும் முயற்சியில் இலங்கை அரசாங்கத்தினால் வெற்றி பெறமுடியவில்லை.

இந்த நிலையில் தொடர்ந்தும் இந்தியாவை வெளியில் நிற்கும் நிலையில் இருந்து - சமாதான முயறசிகளுக்கு நெருக்கமாகக் கொண்டு வரும் முயற்சிகளில் இலங்கை அரசாங்கம் இறங்கியுள்ளது. இதற்காகவே அமைச்சர் மிலிந்த மொரகொட கடந்தவாரம் இந்தியாவுக்குச் சென்றிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# வெகுஜன ஒன்றியத் தலைவர் வீட்டில் ஓட்டோவில் வந்தவர்கள் அட்டகாசம்!

## வவுனியாவில் திடுக்கிடும் சம்பவம்

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சதாசிவம் குலதேவராஜாவின் வீட்டினுள் நுழைந்த கோஷ்டியொன்று கார், தொலைக்காட்சிப் பெட்டி உட்பட வீட்டிலிருந்த பொருட்களை அடித்து நொருக்கியதோடு அங்கிருந்த நபர் ஒருவரையும் தாக்கியுள்ளது.

வவுனியா - யாழ் வீதியில் அமைந்துள்ள அவரது வீட்டிற்கு நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் எட்டு ஓட்டோக்களில் வந்திறங்கியோரே இத்தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதுபற்றிப் பொலிசாரிடம் முறைப்பாடு செய்துள்ள குலதேவராஜா -

தன்னைக் கொலை செய்யும் முயற்சியாகவே இத்தாக்குதல் நடந்திருப்பதாகவும் தமிழ் ஆயுதக்குழு ஒன்றினைச் சேர்ந்த நபர்களே இதனை மேற்கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

தன் வீட்டைத் தாக்கியவர்கள் வந்த ஓட்டோ ஒன்றின் இலக்கத்தை தான் கவனித்துப் பொலிசாரிடம் தெரிவித்திருப்பதாகவும் அந்த ஓட்டோ டபிள்யூ.பி.ஜீ.ஏ. 810 இலக்கமுடையது என்றும் குலதேவராஜா தெரிவித்துள்ளார். (03)

### றமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 5.02 |
| சுபஹ் | 5.17 |
| உதயம் | 6.38 |
| லுஹர் | 12.31 |
| அஸர் | 3.53 |
| ம.்ரிப் | 6.23 |
| இஷா | 7.37 |

# டென்மார்க் 15 கோடி ரூபாவை உடனடி உதவியாக வழங்கும்!

(கொழும்பு)

இலங்கையின் வட-கிழக்குப் பகுதிகளில் அடுத்த மூன்று வருடங்களில் இடம் பெறவுள்ள புனர்வாழவு, புனர்நிர்மாணப் பணிகளுக்கு டென்மார்க் அரசாங்கம் 15 கோடி ரூபாவை உடனடி உதவியாக வழங்கவுள்ளது.

விசேட புனர்வாழ்வுத் திட்டத்தின அடிப்படையில் இந்த உதவிகள் வழங்கப்படும் எனவும், இந்த நிதியை இம்மாதமே இலங்கை அரசிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் டென்மார்க் அறிவித்துள்ளது.

அதேவேளை டென்மார்க் அரசாங்கம் 45 கோடி ரூபாவை இலங்கைக்கு கடனாக வழங்க முன்வந்துள்ளதாகவும் டென்மார்க் தூதரக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச மனித உரிமை மாநாடுகள் அடுத்த ஆண்டு யாழ்ப்பாணத்தில்!

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச மாநாடுகளை அடுத்த ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை நாட்டின் வடபகுதியில் ஏற்படுத்துவதற்காகவே இம்மாநாடுகூளை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டில் மிக முக்கிய மூன்று சர்வதேச மனித உரிமை மாநாடுகள் யாழ்ப்பாணத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இம்மாநாட்டில் உலகின் பல பகுதிகளிலிருந்தும் மனித உரிமை ஆர்வலர்கள் பங்குபற்றுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க,லி)



நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவைச் சேர்ந்த தேவநேசன் நேசையா, செல்லக்குமரன், ஆணைக்குழுத் தலைவர் ஹொட்பிரி குணதிலக மற்றும் மனோரி முத்தெட்டுவேகம ஆகியோரை முதற்படத்திலும், இவர்களைச் சந்தித்துப் பேசிய காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்:- லிவிங்ஸ்டன்)

### தலைக்கவசம் அணிதல், ஒருவழிப்பாதை

# யாழில் போக்குவரத்து விதிகள் கடுமையாக அமுல்படுத்தப்படும்!

(யாழ்ப்பாணம்)

இந்த மாதத்திலிருந்து போக்குவரத்து விதிகள் கடுமையாக அமுல்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இம் மாதத்திலிருந்து போக்குவரத்து விதிகளை மீறுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் அறிவித்துள்ளனர். முன்னைய காலங்களிலும் பொலிஸார் மக்களுக்குப் போக்குவரத்து விதிகள் தொடர்பாக பல அறிவுறுத்தல்களை விடுத்த போதிலும் மக்கள் இப்போகவுரத்து விதிகளை பின்பற்றுவதாகத் தெரியவில்லை எனவும் இம்மாதத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்கள் இருவரும் தலைக்கவசம் அணிதல் வேண்டும், ஒருவழிப்பாதை விதிகளை துவிச்சக்கரவண்டிகளும் பின்பற்ற வேண்டும், வாகனங்களில் பயணிப்பவர்கள் வாகனங்களை தம்முடையதென உறுதிப்படுத்தும் வகையில் வேண்டிய ஆவணங்களை வைத்திருக்க வேண்டும், அத்துடன் ஆஸ்பத்திரி வீதி உட்பட அனைத்து வீதிகளிலும் நடைபாதை வியாபாரம் தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். எனவே, இவ்விதிகளை மக்கள் பின்பற்றும்படியும் மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இடைக்காடு மயானம் மீண்டும் மக்கள் பாவனைக்கு

(அச்சுவேலி)

பத்து வருடங்களுக்கு மேலாக மக்கள் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்த இடைக்காடு சாமித்திடல மயானம் மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

இந்த மயானத்தில் உள்ள கண்ணிவெடிகள், மிதிவெடிகள் படையினரால் அகற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. பொதுமக்கள் பாவனைக்கு இந்த மயானம் திறந்து விடப்படாமல் இருப்பது குறித்து 'நமது ஈழநாடு' செய்தி வெளியிட்டதன் தொடர்ச்சியாகவே இது மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளது.



சுன்னாகம் ரோட்டறிக் கழகத்தினால் நடத்தப்பட்ட க.பொ.த சாதாரண வழிகாட்டல் கருத்தரங்கில் பங்கு பற்றிய மாணவர்களில் ஒரு பகுதியினரை மேலே உள்ள படத்தில் காணலாம். (72)

### தென்மராட்சியில் வீதிகளைத் திருத்த நடவடிக்கை

(சங்கத்தானை)

தென்மராட்சியிலுள்ள புத்தூர்ச் சந்தி, கொடிகாமம், மீசாலை மற்றும் நுணாவில் பகுதிகளில் அதிகமாகச் சேதமடைந்துள்ள வீதிகள் சில, வீதி அபிவிருத்தி அதிகார சபையால் திருத்தியமைக்கப்படவுள்ளன. (30)

## பழனியாண்டவர் விக்கிரகம் திருட்டு

(தாவடி)

உடுவில் தெற்கு புளியடி வைரவர் ஆலயத்தில் ஒரு அடி உயரமான - ஐம்பொன்னாலான பழனியாண்டவர் விக்கிரகம் திருட்டுப் போயுள்ளது.

27ஆம் திகதி காலை பூசை முடித்து கதவைப் பூட்டிவிட்டு அர்ச்சகர் சென்றதற்குப் பின்னர் பிற்பகல் பூசைக்கு வந்தபோது ஆலயக் கதவு உடைக்கப்பட்டு விக்கிரகம் திருட்டுப் போன சம்பவம் தெரிய வந்தது. (88)


## வாழ்க வளமுடன்

### நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்.

HAPPY BIRTHDAY



பெயர் :இ.தர்சனா
முகவரி:தையிட்டி,
காங்கேசன்துறை.



முதலாவது அகவையில்.



பெயர் :அ.ஒனிஷன்
முகவரி: பிறில்லியன்ற் அக்கடமி,
உயரப்புலம்.



பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்


## தோண்டப்பட்டுள்ள குழிகளால் போக்குவரத்து நெருக்கடி

(சாவகச்சேரி)

தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்காக யாழ்.நகர வீதிகளில் தோண்டப்பட்டுள்ள பாரிய கிடங்குகளால் பெரும் போக்குவரதது நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

வீதிகளில் செல்லும் வாகனங்களும் பாதசாரிகளும் இக்குழிகளில் விழுந்து எழும்புவது தினமும் காணும் காட்சியாகிவிட்டது.

தோண்டப்பட்டுள்ள பாரிய கிடங்குகளினுள் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுவதுடன் தொற்று நோய்கள் பரவும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது. (29)

# யாழ். பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகள் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகள் தொடர்பான கற்கைநெறி ஒன்றை ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொழும்பு பல்கலைக்கழகம், தென்கிழக்கு பல்கலைக்கழகம் போன்றவற்றில் இவ்வாறான கற்கை நெறி ஒன்று ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதேபோல், யாழ். பலகலைக்கழகத்திலும் இக்கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு தம்மாலான உதவிகளை வழங்குவதற்கு தயாராக இருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கொட்பிறி குணதிலக தெரிவித்தார்.

இவ்வாறான கற்கை நெறியின் அவசியம் வடபகுதியில் அதிகமாக உள்ளதென்றும், எனவே இக் கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு அனைத்து தரப்பினரும் முன்வந்து ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

(க,லி)

### செல்வா நினைவுத் தூபிக்கு சுற்று மதில்

(வண்ணார்பண்ணை)

யாழ்.முற்றவெளியில் அமைந்திருக்கும் தந்தை செல்வாவின் நினைவுத் தூபியினைச் சூழ உயரமான சுற்று மதில்கள் அமைக்கும் பணி தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அடுத்த ஆண்டு ஏப்பிரல் மாதம் தந்தை செல்வாவின் 100ஆவது ஞாபகார்த்த தினம் வருகின்றது எனவும், அதற்கு முன்னராக இவ்வேலைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுவிடும் என தந்தை செல்வா அறங்காவலர் குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார். (60,59)



மானிப்பாய் பரிஷ் லியோக் கழகம், மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்துடன் இணைந்து நவீல்ட் பாடசாலையில் நடாத்திய கலை விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட லயன்ஸ் கழகங்களின் ஆளுநர் பபா ஒறிகன் பிங்கியும் அவரது குழுவினர் உட்பட கழக உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.

### யாழ்.மாநகரசபை நிலைமை குறித்து

## மாநகர முதல்வர்களின் ஒன்றியக் கூட்டத்தில் ஆராயப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபையின் அடிபபடைப் பிரச்சினைகள் தொடர்பாக, மாநகர சபை முதல்வர்களின் ஒன்றியக் கூட்டத்தில் ஆராயப்படும்.

இவ்வாறு கம்பஹா மாநகர உதவி முதல்வர் தெரிவித்துள்ளார்.

சிநேகபூர்வமான உறவை வலுப்படுத்தும் நோக்குடன் கம்பஹா மாநகர சபை உதவி முதல்வர், உறுப்பினர்கள் அடங்கிய 15 பேர் யாழ். மாநகர முதல்வர் செல்லன் கந்தையனைச் சந்தித்துப் பேசினர்.

யாழ். மாநகர சபையில் நிலவி வரும் வாகன வசதியின்மை, மாநகர சபைக்குச் சொந்தக் கட்டடம் போன்ற அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக மாநகர முதல்வர் தெரிவித்திருந்தார்.

இங்குள்ள நிலைமையைக் கேட்டறிந்த கம்பஹா உதவி முதல்வர், அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள மாநகர முதல்வர்கள் ஒன்றியக் கூட்டத்தில் இது பற்றி ஆராய்வதுடன், சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் இங்குள்ள நிலைமைகள் தொடர்பாக விரிவாக எடுத்துக் கூறவுள்ளதாக கம்பஹா மாவட்ட உதவி முதல்வர் தெரிவித்ததாக மாநகர சபை முதல்வர் செல்லன் கந்தையன் தெரிவித்தார். (ச)

## பட்டினிக்கு எதிரான நிறுவனம் அடுத்த வருடத்தில் புதிய திட்டங்கள்!

(ஊரெழு)

யாழ்.குடாநாட்டில் விவசாய மற்றும் சுயதொழில் ஊக்குவிப்புத் தொடர்பாக பட்டினிக்கு எதிரான நிறுவனம், கிராமங்கள் தோறும் பல்வேறு செயற்பாடுகளை அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

விவசாயிகளுக்கான பயிற்சிக் கருத்தரங்கு, சுயதொழில் ஊக்குவிப்பு, மகளிருக்கான சேமிப்பு, கூடன்வசதி மற்றும் விவசாய தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் நீர் நிலைகள் புனரமைப்புச் செய்தல் ஆகிய வேலைத் திட்டங்களை ஆரம்பிக்கப்படவுள்ளன.

எட்டு, எட்டு கிராமங்களாக தெரிவு செய்யப்பட்டு 4 வருடங்களுக்கு, மேற்படி செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பட்டினிக்கெதிரான நிறுவன யாழ். மாவட்ட செயற்திட்ட அதிகாரி தெரிவித்துள்ளார். (96)

## நெடுந்தீவு சங்கத்துக்கு அமைச்சர் ஓட்டோ கையளிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் முச்சக்கரவண்டி ஒன்றினை கையளித்துள்ளார்.

நெடுந்தீவிற்கு கடந்த வியாழனன்று மேற்கொண்ட விஜயத்தின்போது தம்முடன் எடுத்துச் சென்ற மேற்படி முச்சக்கர வண்டியை அமைச்சர், நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகளிடம் கையளித்தார்.

அண்மையில் நெடுந்தீவிற்கு விஜயம் செய்து நெடுந்தீவு மக்களுக்கு கொடுத்த உறுதிமொழியின் படி இம் முச்சக்கரவண்டி வழங்கப் பட்டது. (09,113)

### மாங்குளத்தில் லொறி விபத்து

(வவுனியா)

மாங்குளம் - பணிக்கன்குளம் திருப்பத்தில் நேற்று முன்தினம் நிகழ்ந்த வீதி விபத்து ஒன்றின் போது, லொறி தடம்புரண்டதில் ஒருவர் படுகாயமடைந்தார். அண்மைக்காலங்களில் இதே இடத்தில் ஏ-9 பாதை திறந்த பின் நிகழ்ந்த பத்தாவது வீதி விபத்து இது என்பது குறிப்பிடத்தக்கது. (03)

# வடலி

எங்கள் வடலி மீதேறி
நுங்குகளின் உள்ளீட்டை உறிஞ்சி உருமாற்றி
'கள்' பெற்றுக் களியாட்டம் போட்ட கயவர் எங்கே..?
கருப்பம் தடை செய்து கருப்பநீர் அருந்த
அனுமதித்த கடையர் இன்றெங்கே..?
எதற்கிந்த இன அழிப்பு? வடலிக்கேன் 'வடக்கிருப்பு'?
மண்ணுக்கா புரியாது உம் தீர்க்க தரிசனங்கள்.
பனை விதைகள் உருவானால்
அவை மண்ணில் தமைப்பதிக்கும்
தரைபற்றி, முகிழ் அவிழ்த்து, முட்டி மோதி
வெளிக்கிளம்பும், வடலிகளாய் வடிவெடுக்கும்
அதைத் தடுக்கும் கருத்தடைதான்
கள்-கருப்பநீர் கறத்தல்.

உம் வீடுவேய, கூரை ஒழுகாது காக்க
வேர்க்காது விசிறிவிட, வேலி அடைக்க... பாய்பின்னி
படுத்துறங்க என்றுரைத்து
இன்றுவரை குருத்தோடு ஓலைவெட்டிக்
குவித்தீர்கள்.
நேற்று விதையூன்றி நீருற்றி வளர்த்தெடுத்த
சிறு செடியா நீர் அழிக்க...?
இந்தக் கரும்பனைகள் இம்மண்ணின் பூர்வீகம்.
ஓலைவிழ... ஓலைவிழ... ஓலைவிழ... ஓலைவிழ
காவோலை சரசரக்க பனங்கூடல் சலங்கையிட
ஓலைகளின் வீழ்ச்சியில் நாம் உயிர்த்தெழுந்தோம்
இது வடலிகளின் வரலாறு.

கருக்குகளில் புறாக்கள் கால் பதிக்கின்றன.
புதுவிதைகள் ஊன்றி பூர்வீகம் ஏற்கும்
புனித நாட்கள் நகர்கின்றன.
இனி என்ன..?
பனங்கூடல் ஊடே படிகநிலா
காட்சி தரும்.


பாளை விரியும், பனுவில் பூப்படையும்
குரும்பை கொழுத்து.. குமர்ப்பருவம் கொள்ளும்
நிறைமாதக் கர்ப்பிணியாய்
நெடுமரங்கள் நின்றிருக்கும்.
காதலிலே மையம் கொண்ட கவிப்புயல்கள்
விழித்து எழுவர்
பூகம்பம் எதிர்க்க உயிர்கொடுத்து உருக்குலைந்து
அக்கினியில் நீறாகி
தரையோடு தமைச்சேர்த்து எருவாகிப்போன
வடலிகட்கு வாழ்த்திசைப்பர்.

- உச்சிக்கிழான்

# A-9 என நீளும் நினைவுகள்

பகுதி எட்டு

இரண்டரை வருடங்கள் படிந்துமே
இருந்த நச்சுப் புகையைக் கலைத்தனர்...,
இரண்டரை ஆண்டு வனத்திற் தவஞ்செய்து
எண்ணற்ற பலம் பெற்ற 'தருமர்கள்'!
தெருக்கள் ஒவ்வொன்றும் தீய நிழலோடச்
சிலிர்த்தன; A-9 உம் குளிர்ந்தது
"வருகவே வனவாசம் முடித்திங்கு"
வானம் கட்டியஞ் சொல்லி மகிழ்ந்தது



கண்டி வீதியின் இரண்டு மருங்கிலும்
கையசைத்தது சிவப்பு மஞ்சள் கொடி
சந்தி சந்தியாய் ஆடின வாழைகள்
தமிழ் சிவந்தது...எழுச்சி இசைகேட்டு
குண்டதிர்ந்து குலுங்கிய திக்கெல்லாம்
குழல் தவிலுடன் கும்மி கலந்தது
இன்று போலத்தான் அன்றும் தம் சேய்கள்
எடுத்தணைக்கத் திரண்டது 'தாய்-அகம்'

ஹிந்தி கேட்டுக் கிழிந்த செவி..'புயற்
கீத' நூலினால் தைபட்டுப் போகவும்
செந்தமிழ்க் கவி 'யாழினை' மீட்டவும்
திசைச் சிறைகள் ஒவ்வொன்றாய்த் திறக்கவும்
வெந்து அஞ்சி மருண்ட இதயங்கள்
விடுதலை பெற்ற சிட்டாய்ப் பறக்கவும்
பந்தடி பட்டு நொந்த A-9.. 'திருப்
பாதங்கள்' படப் பூத்துக் குலுங்கிற்று.

ஜெயங்கொண்டான்



இலக்கிய சோலைக்கு வளம் சேர்க்க...

இலக்கிய ஆர்வலர்களே!

உங்களிடம் இருந்து கருத்துக்களையும், ஆக்கங்களையும் "நமது ஈழநாடு" எதிர்பார்க்கின்றது.

"நமது ஈழநாடு"
இலக்கியச் சோலை
இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு உங்கள் கருத்துக்களையும் ஆக்கங்களையும் அனுப்பிவையுங்கள். தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.


# குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "நரகொடு சொர்க்கம்" - நாடகம்

## ஒரு மனப்பதிவு

**த.பிரபாகரன்**

சமாதானச்சாரல்களின் சிதறல்களால் இப்போது பரவலாக விழாக்களும், கலை நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உறங்கிக்கிடந்த ரசனை உணர்வுகள் தூசுதட்டப்படுகின்றன. புதிய கலைப்படைப்புக்களோடு முன்னைய கலைப்படைப்புக்களும், இதனூடாக மீளுருப்பெற்று வருகின்றன. இவ்வகையில் யாழ்.தேசிய கல்வியிற்கல்லூரியில் நடைபெற்ற குழந்தை ம.சண்முகலிங்கத்தின் எழுத்துருவில் தோற்றம் பெற்ற, 'நரகொடு சொர்க்கம்' என்ற ஆற்றுகை பற்றிய சில மனப் பதிவுகளை இங்கு பகிர விரும்புகின்றேன்.

'நரகொடு சொர்க்கம்' எனும் இந்நாடகம் பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்கனவே ஆற்றுகை செய்யப்பட்டிருந்தது. இப்போது தேசிய கல்வியியற் கல்லூரி நாடக விரிவுரையாளரான க.இ.கமலநாதன் அவர்களின் நெறியாள்கையிலும், கல்வியியற்கல்லூரி மாணவர்களின் நடிப்பிலும், குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் எழுத்துரு உயிரூட்டப்பட்டது.

ஆற்றுகைவெளி இரு பிரதான பகுதிகளாகக் காணப்பட்டது. மேடையின் முன்புறமாக வலப் பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த தொலைத் தொடர்புநிலையம் ஒரு தளமாகவும், தில்லைநாதன் என்ற பாத்திரத்தின் வீடு இன்னொரு தளமாகவும் பயன்படுத்தப்பட்ட போதும் அளிக்கையின் போது பார்வையாளர்களுக்கும், அரங்கிற்கும் இடையே உள்ள 'அழகியல் இடைவெளிப்' பகுதியினராலும் சில அசைவுகள் நிகழ்த்தப்பட்டன.


நாடகம் 1996ஆம் ஆண்டை மையமாக வைத்து எழுதப்பட்டதாக ஆரம்பத்தில் அறிவித்திருந்தமையால், நாடகச் சூழ்நிலைகளை தெளிவாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. சொந்த ஊரைவிட்டு சுவிஸிலும், கனடாவில உள்ள தம்பிள்ளைகளிடம் போகத துடிக்கும் கிளாக்கரும், அவரது மனைவியும்; மகன், மருமகள், பேரன், பேத்தி என்னும் உறவுகளோடு சொந்த வீட்டில் ஆனந்தமாய் இருக்கும் தில்லைநாதன் தம்பதியினர்; மயிலிட்டியில் உள்ள தன்னுடைய வீட்டுக்குப் போக ஏங்குகின்ற ஒரு குடும்பப் பெண்; ஊர்மணம் கமழும் கிராமத்துப் பாத்திரமான குளறி மணியம்; மகேசன் என்னும் பாத்திரங்களைச் சுற்றி மெல்லிய இழையாய் இந்நாடகக் கதை பின்னப்பட்டிருக்கின்றது. சொந்த ஊரின் இருப்புப்பற்றிய பல்கோணப் பார்வையினை இந்நாடகமாந்தர் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விதமாகத் தரிசிக்கக் கூடியதாக விருந்தது. ஒரு கூட்டில் மகிழ்வாயிருந்த தில்லைநாதன் குடும்பமும் மெல்லச்சிதறத் தொடங்குவதை, தில்லைநாதனின் பேரன் வினோத் வெளிநாடு போக ஆசைப்படுவதோடு காட்டி, "ஊர் வெள்ளம் இப்ப எங்கட வீட்டுக்கயும் ஊறத்தொடங்குது!" என்று நாடகம் தான் சொல்ல வந்த சேதியை, மிகத் தெளிவாகப் பார்வையாளர்களிடம் கொண்டுசென்றது.

நாடகத்தின் காட்சியமைப்பில் எடுக்கப்பட்டிருந்த சிரத்தையைப் பார்த்தவுடனேயே புரிந்து கொள்ள முடிந்தது. தில்லைநாதனின் வீடு, தொலைத்தொடர்பகம் இரண்டுமே வெகு யதார்த்தமாக அமைக்கப்பட்டிருந்தன. எனினும் தில்லைநாதனின் வீட்டில் காணப்படும் அந்தச் சொகுசுக்கதிரைகள் ஒரு செயற்கைத்தனத்தை உண்டு பண்ணியதும் போலிருந்தது.

ஒப்பனைகள் இயல்பானதாயும், பாத்திரங்களுக்கேற்றபடியும் இருந்தன. ஏதோ பூசவேண்டும் என்பதற்காக ஒப்பனைப் பொருட்களைக் கண்டபடி பூசாமல், அளவான ஒப்பனையைப் பார்க்கையில் மனசுக்கு இதமாக இருந்தது. பொருத்தமான இடங்களில் பயன்படுத்தப்பட்ட 'நல்லதோர் வீணை செய்தே', 'காணி நிலம் வேண்டும்', போன்ற பாரதியின் பாடல்களும், காத்தவராயனில் வருகின்ற ஒரு பாடலும், அதற்கான இசையும் நெஞ்சைத்தொட்டுச் சென்றாலும், பின்னணி இசை எடுபடவேயில்லை என்பதே பார்வையாளர்கள் பலரின் முணுமுணுப்பாக இருந்தது.

எங்களூர் நாடகங்களில் உள்ள வழமையான ஒலியமைப்புச்சாபக் கேடு இந்த நாடகத்தையும் விட்டு வைக்கவில்லை. பல இடங்களில் இனம்புரியாத இரைச்சல்கள் வந்து பார்வையாளர்களை ரசனைப் புள்ளியிலிருந்து தூரவிலகப்பண்ணின.

நடிப்பைப் பொறுத்த வரையும் இப்போதும் கண்ணில் நிற்பது குளறி மணியம்தான். கிராமத்துப் பாமரத்தனமான அப்பாத்திரத்தைச் செய்தவர், பாத்திரத்தை அப்படியே மனதளவில் உள்வாங்கி நடித்திருந்தார். பாட்டுப்பாடிக் கொண்டே பழைய சைக்கிளில் வருவது, "ரெலிபோனில ஹலோ சொல்லியோ பேசவேணும்?" என்றும், "ரெலிபோனில வாயை எந்தப் பக்கம், காதை எந்தப் பக்கம் வைக்கிறது?" என்றும் கேட்பது, உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவது, உரத்ததொனியில் கிராமத்துக்கேயுரிய தன்மையோடு கதைப்பது, என்று அப்படியே அசல் குளறி மணியமாகவே அந்த நடிகர் வாழ்ந்து விட்டுப் போயிருக்கிறார் என்றே கூறவேண்டும். மற்றும் மகேசன், ரெலிபோன் கடைப் பெடியன், மயிலிட்டிப் பெண், வினோத் என மற்றையோரும் யதார்த்தமாகவே செய்திருந்தார்கள். கிளாக்கர் தம்பதிகளாக நடித்த இருவரும் சில இடங்களில் இயல்பாகச் செய்ய முனைந்தபோதும், தங்களுடைய பாத்திர வசனங்கள் அனைத்தையும் பார்வையாளர்களைப் பார்த்தபடியே சொன்னது நாடகத்தோடு ஒட்டாத தன்மையாகக் காணப்பட்டது.



'நரகொடு சொர்க்கம்' - ஒரு காட்சி

நாடகாசிரியரான குழந்தை. ம.சண்முகலிங்கம் பல இடங்களில் தன்னை வெளிப்படுத்துகின்றார். அதிலும் குறிப்பாக மகேசன், குளறி மணியம் போன்ற பாத்திரங்களின் வாயிலாகத் தன் கருத்தைப் பார்வையாளரிடம் கொண்டு செல்கின்றார். அத்துடன் அவருக்கேயுரிய பாணியில் வரும் சொற்பிரயோகங்களும், எழுத்துரு குழந்தை ம.சண்முகலிங்கத்தினுடையதுதான் என்று இனங்காட்டிக் கொடுக்கின்றது. "பாண்தானே இப்ப எங்கட எல்லாற்ற சாப்பாடும். அது தானே எங்களுக்கு இந்தப் பேர் வந்தது. யாழ்ப் - 'பாணர்!' " என்ற குளறி மணியத்தின் கூற்றும், "இப்ப இஞ்ச கி.மு. இல்லை கி.பி எல்லோ நடக்குது! கி.மு எண்டால் கிளாலிப் பயணத்துக்கு முதல், கி.பி எண்டால் கிளாலிப் பயணத்துக்குப் பிறகு!'' என்னும் மகேசனின் வசனமும் இதற்கு நல்ல எடுத்துக் காட்டு!

நெறியாளர் நிறையப் பாடுபட்டிருக்கிறார். காட்சிமைப்பு, நடிப்பு, அசைவுகள் எனப்பலவற்றிலும் தன் தனித்துவத்தை நிலை நிறுத்தியிருக்கின்றார். யாழ்ப்பாணத்துச் சம்பிரதாய மரபுகளான செருப்புக் கழற்றி விட்டு வீட்டுக்குள் போதல், தேநீர் குடிக்க முதல் கொஞ்சத்தை விரலால் தொட்டு நிலத்தில் சிந்துதல் என்பன போன்ற நுணுக்கமான செயல்களைக் கூட கருத்திற்கொண்டு அரங்கிற் காட்டியிருக்கின்றார். தாக்கு வன்மை கொண்ட நுகர்வுப் பொருளாக இந்நாடகத்தை அளிக்கை செய்த அவர் நிச்சயம் பாராட்டுக்குரியவர்.

கடைசியாக, நாடகம் பார்த்த திருப்தியைக்காட்டிலும் ஒரு வாழ்வியல் அனுபவத்தை தரிசித்த திருப்தி கிடைத்தது. 1996ஆம் ஆண்டை மையமாகக் கொண்டு இந்நாடகம் எழுதப்பட்டிருப்பினும், 'வீட்டை விற்பது கஷ்டமான காரியம்' என்ற ஒரு விடயத்தைத் தவிர மற்றெல்லா விடயங்களும் இப்போதும் பொருந்தக் கூடியதாக இருக்கின்றதென்பதே நிதர்சனமாகும். ✻

# வியட்நாம்: பசுமையை நோக்கிப் பயணம்

**1975**. வியட்நாம் இணைவதற்கான போர் முடிந்தநேரம். வியட்நாம விஞ்ஞானிகள் முன்னர் பிரம்மாண்டமாய் இருந்த மாதா வனத்தை (Ma Da Forest)மறுபடியும் உயிர்ப்பிக்க மரம் நடத் துவங்கினார்கள். இந்த வனத்தின் இருபதாயிரம் ஹெக்ரயர்கள் அமெரிக்காவின் ஹெர்பிசைட் தெளிப்பினால் முழுமையாக அழிந்து போனதே இதற்குக் காரணம்.

ஆரம்பத்தில் உள்நாட்டு மரங்களை மீண்டும் வளரவைக்கும் முயற்சி தோல்வியையே சந்தித்தது. வரண்ட சூழ்நிலையில் கன்றுகள் தொடர்ந்து தீப்பற்றிக் கொண்டதே இதற்குக்காரணம்.அமெரிக்க இராணுவம் பயன்படுத்திய வளர்ச்சியை அழிக்கும் மருந்துகள், வியட்நாமின் ஆதார வனங்களைச் சுலபத்தில் தீப்பிடிக்கும் **Pennisetum Polystachyum** வகையாகவே மாற்றி விட்டது. இதை உள்ளூர் வாசிகள் 'அமெரிக்கப்புல்' என்றே அழைக்கத்துவங்கினர்.

மாதா வனத்தின் இயக்குனர் த்ரான் பாடாங் கூறுகையில், 'இந்தப புல்லின் பேரை நாங்கள் முன்னர் கேள்விப்பட்டதே இல்லை. ஆனால் அமெரிக்கர்கள் எங்கு சென்று மருந்து தெளித்தாலும், இந்தப்புல் மட்டும் வளர்கிறது' என்றார்.

போர்முடிந்த பின் , நாங்கள் **Hopea odorata** வையும், **Dip tero carpusdyeri** யையும் மீண்டும் நட்டுப்பயிர் செய்ய முயன்றோம், ஆனால் அந்தக் கன்றுகளால் வளர முடியவில்லை. அதற்குக் காரணம், மேல் மண் மெல்லிதாகவும், சக்தியற்றும் இருந்தது; ஈரப்பதம் குறைவாக இருந்தது; உஷ்ணமும் வெளிச்சமும் மிக அதிகமாக இருந்தன; நாற்றுக்கள் புற்களில் பரவிய தீயில் எரிந்து போயின. இறுதியில்

1981ல் நாங்கள் அந்த உள்நாட்டு மரவகைகள் வாழக்கூடிய பிரமரங்களின் போர்வையை உருவாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தோம் அவை காட்டில் வளரும் நிலைகளை நாங்கள் அப்படியே பின்பற்ற வேண்டியிருந்தது.

நாசகார 'அமெரிக்கப் புல்' இருக்கும் பெரும் பகுதிகளைச் சுத்தப்படுத்தி, வேகமாய் வளரும் நிழல் மரங்களைப் பயிரிட்டோம். அதில் **indigotera tenesmand, Acacia auriculiformes** மற்றும் **Eucalyptus tereticornis**-ம் அடக்கம். நிழல் மரங்கள் குறிப்பிட்ட உயரம் வளரும் வரை காத்திருந்தோம். அதற்கு மூன்றாண்டுகள் பிடித்தன. பின் உள்நாட்டு மரங்களை அதனடியில் பயிரிட்டோம.

இன்று ஆயிரம் ஹெக்ரயர்களுக்கு மேற்பட்ட நிலத்தில் **Acacia, Indigotera** மற்றும் **Eucalyptus** மரங்கள் **dipterocarp** - ன் மூன்று வகைகளுக்கு நிழல் அளிக்கின்றன.அவை **Dipterocarpus datus, D.dyeri** மற்றும் **Hopea Odorata.**

த்ரான் பாடாங் மேலும், 'நாற்று வளரும் இடங்களில், அவைகளுக்குப் பிரத்தேயகத் தேவையான ஈரப்பதத்தையும் நிழலையும் உருவாக்கினோம். இந்த வருடம் ஒரு லட்சம் நாற்றுகளைப் பயிர் செய்கிறோம். தெரியாது கிடக்கும் பல காட்டுச் செடிகளையும் விதை

**தமிழில்: துளசி**

களையும் கொண்டு வந்து வளர்க்கிறோம். ஆனால் **dipterocarps**-ன் விதைகளை சேகரிப்பது அவ்வளவு சுலபமல்ல. இந்த முறையில் அதை மறு உற்பத்தி செய்வதும் சுலபமல்ல. வெளியே போய் திரும்பிவரும் பறவைகள், மிருகங்கள் விதைகளைத் தூவி, பரப்பி காட்டை உயிர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்" என்றார்.

மாதா வனங்களில் செய்யப்படும் முயற்சிகள் வியட்நாமுக்கு நம்பிக்கை அளிக்கின்றன. அதே சமயம் உஷ்ணப் பகுதி மரங்களை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்குத் தேவையான நேரம் மற்றும் உழைப்பு எவ்வளவு என்பதும் தெரியவருகிறது. போரால் பாதிக்கப்பட்ட நாட்டைக் குணப்படுத்த இன்னும் பரந்த அளவில் முயற்சிகள் தேவைபபடுகின்றன. குளுமையாய், ஈரமாய், சாதாரண உஷ்ணத்தோடு, வளமாய் முன்னர் இருந்த ஆயிரக்கணக்கான ஹெக்ரயர்கள் இப்போது சுருங்கி, காய்ந்து, கடுமையான வெப்பமுள்ள பகுதியாக மாறியிருக்கின்றன.

**தொடர்ந்து போர்**

1945லிருந்து 1975 வரை வியட்

**இக்கட்டுரையில் வரும் விடயங்களை எமக்குள்ளும் சற்றே உள்வாங்கிக்கொள்வோமா...?**

நாமில் தொடர்ந்து போர் நடந்து கொண்டே இருந்தது. அதில் ஜப்பான், பிரான்ஸ், அமெரிக்க இராணுவங்கள் வியட்நாமோடு போர் புரிந்தன. அமெரிக்கப் போரின் போது, அதன் இராணுவம், வேண்டுமென்றே முன்னர் பார்த்திராத அளவுக்கு சுற்றுச்சூழலை அழிக்கத் துவங்கியது. அவை:

பயிர் செய்யும் நிலங்களிலும், காடுகளிலும் 72 மில்லியன் லீற்றர் ஹெர்பிசைட் ஊற்றினார்கள். அது முழுமையாகத் தாவர வகைகளையே அழித்தது. மேலும் அதில் மிச்சம் பூமியை விஷமாக்கியது. இதில் நாட்டின் தெற்கில் உள்ள 22 ஆயிரம் சதுர கிலோமீற்றர் காடுகளும், விவசாய நிலங்களும் அழிந்து போயின.

பெரும்பகுதி காடுகளும், விவசாய நிலங்களும், கிராமங்களும் புல்டோசர்களால் அழித்துச் சுத்தப் படுத்தப்பட்டன. நிலத்தின் மேல் மண்ணும் நீக்கப்பட்டது. மே காங் டெல்டாவில் தீப்பற்றக்கூடிய **mela leuca** காடுகளை பெட்ரோல் குண்டுகளால் எரித்தது.

காடுகளிலும் நிலங்களிலும் மிக அதிகமாய் வெடிகுண்டுகள் போட்டு அழித்தது. அதாவது 13 மில்லியன் தொன் வெடிகுண்டுகள் வீசப்பட்டன. இது ஹிரோஷிமாவில் போடப்பட்ட அணுகுண்டைப் போன்று 450 மடங்கு சக்தி வாய்ந்தது.

உடனே இந்தத் தாக்குதல்களினால் இருபது மில்லியன் விற்



பனையாகும் நிலையிலிருந்த மரங்கள், முன்னூறு மில்லியன் கிலோ கிராம் உணவுப் பொருட்கள் 1 லட்சத்து 35 ஆயிரம் ஹெக்ரயர் றப்பர் காடுகள் அழிந்து போயின. நாட்டின் முக்கிய காட்டு விலங்குகளும் மீன்வகைகளும் குறைந்து போயின. இவை நீண்ட நாள் பாதிப்புடையவை. ஏனெனில் சுமார் முப்பது வருடங்கள் கழிந்த பின்னரும் இன்னும் காடுகள் பழைய நிலையை அடையவில்லை.

இந்தப் பாதிப்புகள் வியட்நாமின் நிலப்பரப்பையே மாற்றி விட்டன. உலகிலேயே பிராணி - தாவர வகைகள் சிறந்தும், நுட்பமான சுற்றுச்சூழலும் கொண்ட பகுதிகள் குலைக்கப்பட்டன.

பல மில்லியன் ஹெக்ரயர்கள் கொண்ட இந்த மலைச் சாரல்கள் முன்னர் அடர்த்தியாக உறுதியான மரக்காடுகளாய் இருந்தன. அதில் புலிகளும், யானைகளும் உலவ, காட்டுக் கோழிகள் தங்கள் வண்ணங்களைப் பரப்பியபடி திரிந்தன. ஹெர்பிசைட் இந்தச் சூழலையே மாற்றியது. காட்டையே மாற்றியது. பாலூட்டி மிருகங்கள், காட்டுப் பறவைகள், மாமிசமுண்ணும் மிருகங்கள், ஆந்தைகள் யாவும் அழிக் கப்பட்டன.

அதேசமயம், புல்வெளிகள் தீய ஜந்துக்கள் வளர உதவின. எலிகள் பெருமளவில் பெருகிப் பயிர்களை அழித்ததோடு மனிதர்களுக்கும், கால் நடைகளுக்கும் நோயைப் பரப்பின. அக்குளில் வீக்கம் வரக் கூடிய பிளேக் நோய் 1965 - லிருந்து தெற்கு வியட்நாமில் வேகமாகப் பரவியது.

மூவாயிரம் மில்லியன் கனசதுர நிலத்தையும், மேல் மண்ணையும் இடம் மாற்றிய இருபத்தைந்து மில்லியன் வெடிகுண்டுகளின் தாக்குதல் உடல் நலக்கேட்டையும் விளைவித்தது; நீரோட்டத்தில் தடையையும் உண்டாக்கியது; மண் அரிப்பையும் அதிகப்படுத்தியது. மேலும் வெடிகுண்டுகளின் துணுக்குகள் தங்கிய மண்ணில் வளர்ந்த மரங்கள் தரம் குறைவாக இருந்தன.

*(அடுத்த வாரம் தொடரும்)*

## நூல் அகம்

# பெண்கள் பாடிய "காதல்" "உயிர்வெளி" வரை ஒரு நோக்கு!

தமிழ் இலக்கியத்தில் அதன் தொடக்கப் புள்ளியிலே காதலும் வீரமும் பாடுபொருளாகின. தமிழ்ச் சமூகம் தனது குழும வாழ்வினை இலக்கியமாக வடித்தபோது - இலக்கியத்தின் பாடுபொருளாக காதலும வீரமும் இருந்தன. அது மட்டுமன்றி இலக்கிய வராலாற்று வகைப்பாட்டிற்கும் இரண்டும் பிரிப்புக் கோடுகளாக பின்வந்த காலப் பகுதியில் அவை பகுப்பாய்வாள்களுக்குப் பெரிதும் உதவின.

இந்த வகையில் - இலக்கியத்தில் காதல் பாடுபொருளான போதும், அந்த பாடுபொருளுக்கான "காதல் இலக்கியங்களை" யார் பாடினார்கள் என்ற வினாவிற்கு- ஆண் கவிஞர்களே, பெண்களைத் தமது உடமையாக்க - ஆக்கிரமிப்பு மனபபாங்குடன் அவளை அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு கொண்ட மடந்தையாக வர்ணித்து இலக்கியத்தை வடிவமைப்பதிலே மிகவும் குறிப்பாக இருந்தனர்.

"பெண் சிரித்தாற் போச்சு - பொயிலை விரித்தாற் போச்சு" என்ற முதுமொழியின் அனைத்துக் கருத்தியல் பரிமாணங்களையும் விளங்குவதாக, தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் தங்கள் உணர்வலைகளை வெளிக்கொணர்வதற்கான தடைகளை, தந்தை வழிச் சமூக அமைப்பு இறுக்கமாகக் கடைப் பிடித்துக் கொண்டது.

ஆனால் - சங்க இலக்கிய காலத்தில் காதல் கவிதைகள் பாடிய பெண் கவிஞர்கள் இருந்த போதும் - அக்கவிதைகள் அகநானூறு, குறுந்தொகையில் இருந்த போதும், அவ்விலக்கியங்கள் அங்கீகரிக்கப்படவில்லை, மாறாக அவை மறைக்கப்பட்டன.

இதற்கு உதாரணமாக சங்க கால ஒளவையைக் குறிப்பிடலாம். பின்பு நாலாயிரம் திவ்விய பிரபந்தத்திலே, ஆண்டாளினது பாசுரங்கள், இறைவன் மீது காதல் உணர்வை வெளிப்படுத்துவனவாக அமைந்தன.

இவ்விலக்கிய ஒட்டத்திலே ஈழத்து இலக்கியமும் எமக்கு இதே செய்தியைத்தான் கூறி வந்தது.

ஆனால் காலவோட்டத்திலே எமது சமூகம் - சுதந்திரத்தையும் சமூக விடுதலையையும் ஏக காலத்தில் வேண்டி நிற்கும் காலமாகவும் - அதற்காக ஆயுதப் போராட்டமே தவிர்கக முடியாத மார்க்கமாக, எமது சமூகத்திற்கு காலத்தின் கட்டளையாக வந்த போது, சமூகம் "பெரும் வெடிப்புக் களை" உருவாக்கியது மட்டுமன்றி உள்வாங்கியும் கொண்டது.


அந்த வகையில் சமூக விடுதலையின் ஓரங்கமாக பெண்விடுதலை முதன்மை பெற்றதாக அமையவே, பெண்கள் தங்கள் சுயங்களை வெளிப்படுத்தும் கவிதைகளை எழுத முடிந்தது.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்கு பெண்களது கவிதைகள் 1980 களிலிருந்து புது வரவாக அமைந்தது மட்டுமன்றி, பெண்கள் தமது சுயவெளிப்பாடுகளைச் சுதந்திரமாக வெளியிட்டனர்.

இந்தக் காலகட்டத்தில் போராளிகள், தமது போரியல் கவிதைகளைப் பாடினர்.

போராளிகள் தமது போராட்டம் பற்றியதும், போராட்ட வாழ்வு பற்றியதும், சமூகத்தின் அடக்கு முறைகள் பற்றியதுமான கவிதைகளைப் பாடியபோது - அப் போராட்ட காலத்தில் தமது காதல் உணர்வுகளையும் வெளிக்கொணர்ந்தனர். அவ்வாறு வெளிக்கொணரப்பட்ட கவிதைகளில் காதலிலும் பார்க்க, போருக்கான நிர்ப்பந்தம் அவர்களைப் போராட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்க வைத்தது. இதனால் தமது தனிப்பட்ட காதல் உணர்வுகளுக்கப்பால், போராளிகள் - தமது காதல் உணர்வை மண்ணினதும் மக்களினதும் மீதான பற்றாகவும் பாசமாகவும் வெளிப்படுத்தியது மட்டுமன்றி, தங்களையும் தமது உயிர்களையும் மண்ணிற்காகவும் மக்களுக்காகவும் அர்ப்பணித்துக் கொண்டனர்.

இதேவேளை - ஏனைய ஈழத்து பெண் கவிஞர்களும் தமது காதல் உணர்வைச் சுயமாக - தங்களது




தனித்துவத்தையும் சுயத்துவத்தினையும் முதன்மைப்படுத்தி கவிதை புனைய முடிந்தது.

இந்த வகையில் 1987 இல் ஈழத்துப் பெண் கவிஞர்களின் இருபத்தைந்து கவிதைகளைத் தொகுத்து "சொல்லாத சேதிகள்" என்ற கவிதைத் தொகுதியினை பெண்கள் ஆய்வு வட்டம் வெளியிட்டது.

அண்மையிலும் - பெண்களது காதல் கவிதைகளை உள்ளடக்கிய 'உயிர் வெளி' கவிதை நூலினை சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் வெளியிட்டுள்ளது. இவ் உயிர் வெளித் தொகுதியில் நஜிபா, பெண்ணியா, ரேவதி, யாழ். ஆதிரை, துர்க்கா, சுல்பிகா, ஒளவை, ஊர்வசி, மைத்ரேயி, மசூறா-எ.மஜிட், சங்கரி ஆகிய கவிஞர்களது இருபத்தைந்து கவிதைகளை உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேற்கூறிய இரண்டு கவிதைத் தொகுதிகளான 'சொல்லாத சேதிகள்', 'உயிர்வெளி' ஆகியவற்றில்- முன்னதில், பெண்கள் தமக்கு இழைக்கப்படும் அனைத்து அடக்கு முறைகளுக்கு எதிராகவும் கவிதைகளை யாத்தனர். ஆனால் பின்னதில், பெண்கள் தமது காதல் உணர்வுகளைப் பிரதானமாக வெளிப்படுத்திய கவிதைகளைத் தொகுத்துள்ளார் பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு.

இந்த வகையில் உயிர்வெளிக் கவிதைத் தொகுதியில் ஊர்வசியினது கவிதையில் -

"இப்பொழுதும் என்னை
நினைத்துக் கொண்டுதான்
இருக்கிறாயா?

'மறந்துவிடு' என்று
உனக்கு
நான் சொல்ல முடியாதுதான்
இருந்தாலும்

பொருந்தாத வேஷங்கள்
வாழ்க்கையில் எதற்காக?"

என்பதாக தனது நிலைப்பாட்டினைப் பெண்ணொருவர் பழைய காதலனுக்கு அறிவிப்பதாய் அமைகின்றது. இவ்வாறான காதல் கவிதை இன்னொன்றில்,

"திடீரென அதிர்ந்தேன்
சிறிது சிறிதாய்
சோகம் நிறைந்தது
கனக்கும்
காலின் உள்ளே
முறிந்த முள்ளாய்
துயரம்,
இடைக்கிடை
இதயம் வலிக்கும்.
எந்தத் தொடர்பும் இல்லாது
எந்தச் சிறு சொல்லும்
சொல்லாது
போகின்றேன் என்று எதுவும்
புகலாது
போனாய்..."

என்பதாக சங்கரியின் பிரிவுத்துயரை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

பெற்றோரின் திருமணப் பேச்சுக்கள் தனது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாக எடுத்துக் கூறும் பெண்ணியா-

எனது தகப்பனின்
நம்பிக்கையற்ற பார்வைகளினூடும்
தாயின் குமுறல்களினூடும்
உறவுகளின்
என் திருமணம் பற்றிய
சகிக்க இயலாத
பேச்சுக்களினூடும்
சுதந்திரமாய்
நான் வாழ்வதென்பது
எவ்வாறு?

எனத் தனது வினாவினை சமூகத்தின் முன் வைக்கின்றார்.

தனக்கும் தனது காதலனுக்கும் ஏற்பட்ட விரிசலைப் பாடிய - செல்வி,

நினைவுகளாய்
வெறும் நிழல்களாக
நெருடுவது எதற்காக?
மனித விருப்புக்களற்று
வேறெல்லாம் முடிவு செய்யும்
வாழ்வினை வெறுத்து
புரிந்துகொள்ளலில்
புரிந்து கொண்ட
இனிய வாழ்வில்
நூலிடை தள்வு எப்படி வந்தது?

என்பதாக வினாவுகின்றார்.

இவ்வாறான உணர்வுகளைப் பெண்கள் சுதந்திரமாக வெளியிடும் வல்லமையை அண்மைக் காலமாக தமிழ் இலக்கிய உலகம்- தனது மட்டுப்பாடுகளுடன் தவிர்க்கமுடியாத படி அனுமதித்து வருகின்றது. எனினும் கவிதை கவிதைக்காக என்று மட்டும் இராது பெண்கள் தமது நிஜ வாழ்வில் சுயத்தினை முதன்மைப்படுத்தும் வாழ்வினை நிலை நிறுத்திக் கொள்ள அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பது காலத்தின் தேவையாகும். அந்த வகையில் இக்கவிதைத் தொகுதியில் உள்ள கவிதைகள் அவர்களது முயற்சிக்கு பக்கபலமாக அமையும் என்பது திண்ணம்.

**அநபாயன்**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*தனது விழுமியங்களைப் பேணுவதில் அக்கறையுள்ள சமூகமே - தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் வல்லமை கொண்டது.*

*- நாற்நஸ் லியாம்.*

# நமது நோக்கு

## தேவை விழிப்புணர்வு!

எமது மண்ணின் வரலாற்றுத் தொன்மையை, எமது மக்களின் பாரம்பரியத்தை வெளிக்காட்டும் சின்னங்களாக, பொக்கிஷங்களாகத் திகழும் அரும்பொருட்களை - தமிழர் தாயகப் பகுதியிலிருந்து எடுத்துச் செல்வதற்கு விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகம் தடை விதித்திருப்பது - காலத்தின் தேவை கருதிய ஒன்றாகும்.

எமது இனத்தின் பண்பாட்டினையும் மரபையும் - எதிர்காலச் சந்ததிக்குக் கொண்டு செல்லும் அரும்பொருட்கள் எமது இனம் வேரோடி வாழ்ந்து வரும் வரலாற்றையும், அதன் பெறுமதியையும் - எடுத்துச் சொல்லும் காலத்தின் வெகுமதி என்றே கூறலாம்.

எமது இனம், எமது தாயகம், எமது மொழி, எமது பண்பாடு என நாம் கட்டிக்காக்க வேண்டிய எம் மூலதனங்களின் குறியீடாகவும் அரும்பொருட்கள் விளங்குகின்றன.

இத்தகைய அரும்பொருட்களை இழப்பதென்பது - எமது அடிப்படையையே இழந்து விடுவதற்கு ஒப்பானதாகும்.

அண்மைக்காலங்களில் - இந்தப் பொக்கிஷங்களின் மதிப்பும், கௌரவமும் உணரப்படாத வகையில், விற்பனை என்றும் கடத்தல் என்றும் - எம் மண்ணிலிருந்து அரும்பொருட்கள் பல வெளியே எடுத்துச் செல்லப்பட்டு வருகின்றன.

கலை, பண்பாட்டுக் கழகம் அறிவித்திருப்பது போல - இந்த அரும்பொருட்களை இழப்பதென்பது - எமது அடையாளத்தையும், அதை வேண்டி நிற்கும் எமது போராட்டத்தையும் வலுவிழக்கச் செய்யும் என்பதிலிருந்து - இவை எமது மண்ணிலிருந்து எடுத்துச் செல்லப்படுவதன் தாக்கம் தெளிவாகப் புலனாகும்.

அறிந்தோ, அறியாமலோ இத்தகைய செயல்கள் ஏற்படுத்தும் தாக்கத்தைப் பற்றிக் கவலைப்படாது - எம்மவர்கள் சிலர் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு துணையும் போயினர்.

ஆனாலும், இத்தகைய செயல்கள் தகுந்த காலத்தில் இனங்காணப்பட்டு, அவற்றைத் தடுப்பதற்கு ஏற்ற வழிமுறைகளும் அறிவிப்புக்களும் விடுக்கப்பட்டு வருகின்றமை மகிழ்ச்சிக்குரியதே.

உண்மையில் - அரும்பொருட்களை வெளியே கொண்டு செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையானது - இன்னொரு வகையிலும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தப் போதுமானதாகும்.

இதுவரை காலமும் எமது கண்முன்னே காணப்படுகின்ற அல்லது வெளித்தெரியாமல் மறைந்து கிடக்கின்ற அரும்பொருட்களைப் பாதுகாத்துப் பேணவேண்டிய செயலூக்கத்தை இத்தடை தந்திருக்கின்றது எனச் சொல்லலாம்.

உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளில் நவீனத்துவமும் உலகமயமாதலின் செல்வாக்கும் உள்நுழைந்துவிட்ட போதிலும்கூட, அந்நாடுகள் தமது பாரம்பரியச் சின்னங்களை, அரும்பொருட்களை, தமது பண்பாட்டின் தளத்தைப் பாதுகாப்பதில் செலுத்தும் அக்கறையை நாமும் உள்வாங்கிக் கொண்டு -

எமது தாயகத்திலும் இவ்வாறானதொரு மறுமலர்ச்சியை உண்டாக்க - இனி, தீர்மானமும் திடசங்கற்பமும் கொள்ள வேண்டும்.

ஏற்கனவே இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முயற்சிகளை உறுதிப்படுத்தி, சமூகத்தின் சகல தளங்களிலும் இது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த அனைவரும் ஒருசேர இயங்க வேண்டும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், சமூக - சமய நிறுவனங்கள், பொது அமைப்புகள், தன்னார்வ அமைப்புகள், எனச் சகலரும் இவ்விடயத்தில் உரத்த சிந்தனையை மேற்கொண்டு எமது அடையாளத்தைப்பேண உறுதி கொள்வோம்.

# யாழ்ப்பாண நல்லிணக்க குழுக்களில் புலிகளையும் இணைக்க உத்தரவு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் அனைத்துப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டு வரும் நல்லிணக்கக்குழுக்களில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் புனர்வாழ்வுச் செயற்திட்டங்களை இனங்காணவும், நடைமுறைப்படுத்தவும் வசதியாக இந்த நல்லிணக்கக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தேசிய மட்டத்தில் இயங்கும் தேசிய நல்லிணக்கச் செயலணியின் பணிப்பின்பேரில், யாழ்.மாவட்டத்தில் கிராம மட்டத்திலும், பிரதேச மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் நல்லிணக்க குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அமைக்கப்படும் அனைத்துக் குழுக்களிலும் விடுதலைப் புலிகளின் அவ்வப்பகுதிக்குப் பொறுப்பான பிரதிநிதிகள் நிரந்தர அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று யாழ். செயலகம் அறிவித்துள்ளது. இனி வரும் காலங்களில் இக்குழுக்களின் சிபார்சுடனேயே அனைத்து புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# பாதுகாப்புச் செலவின அதிகரிப்புக்கு படையினரின் தொகை அதிகரிப்பும் காரணம்

## போலந்து மாநாட்டில் சர்வானந்தன் உரை

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் புள்ளி விபரங்களின்படி பொலிஸ், இராணுவம், விமானப்படை, கடற்படை ஆகியவற்றில் மொத்தமாக 300,000 படையினர் இருக்கின்றனர்.

அரசாங்க சேவையில் கடமையாற்றும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையில் இது கால்பங்காகும். இந்தத் தொகையில் 75,000 பேர் பொலிஸ் படையில் இருக்கின்றனர். ஏனையோர் ஆயுதப்படையில் இருக்கின்றனர். இலங்கை சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் ஒவ்வொரு 62 பேருக்கும் ஒருவர் இராணுவத்தில் இருக்கிறார்.

போலாந்தின் கரகோல் நகரில் இடம்பெற்ற பொருளாதார சர்வகலாசாலையில் மோதல் முகாமைத்துவமும், சமாதான பொருளாதாரமும், அபிவிருத்தியும் என்ற தலைப்பில் இடம் பெற்ற சர்வதேச மாநாட்டில் உரையாற்றிய துறைசார் நிபுணர் முத்துக்கிருஷ்ண சர்வானந்தன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இலங்கையின் யுத்தச் செலவீனங்கள் அதிகரிப்பதற்கு ஆயுதக் கொள்வனவுச் செலவீனங்கள் அதிகரிப்பதோடு மட்டுமன்றிப் படையினரின் எண்ணிக்கை அதிகரிப்பும் ஒரு காரணமாகும். படையினரின் தொகை 81 சதவீதம் அதிகரித்திருக்கின்றது. இந்தியா தவிர ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் படையினரின் தொகை இலங்கையில் கிட்டத்தட்ட இரண்டு மடங்காகும். கடந்த இரண்டு தசாப்தங்களாக இலங்கை இராணுவ அபிவிருத்திக்கு வழங்கிய முக்கியத்துவம் இதன் மூலம் தெரியவருகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**சம்பள ஆணைக்குழு சிபார்சுப்படி செயற்பட்டால்**

# 1லட்சத்து 50 ஆயிரம் அரச ஊழியர் வேலையில் இருந்து விலக நேரிடும்

திஸ்ஸ தேவேந்திர ஆணைக்குழுவின் சிபார்சின்படி செயற்படுவதாக இருந்தால் அரசாங்க சேவையிலிருந்து 1 லட்சத்து 50 ஆயிரம் அரசாங்க உத்தியோகத்தர்களைக் குறைக்க வேண்டியிருக்கும் என்று நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

திஸ்ஸ தேவேந்திரா சம்பள ஆணைக்குழுவின் சிபார்சுகள் ஏன் நடைமுறைப்படுத்தவில்லை என்று நாடாளுமன்றில் கேட்கப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வருடத்திற்கு 30 ஆயிரம் பேர் வீதம் 5 வருடங்களில் ஒன்றரை லட்சம் அரசாங்க சேவையாளர்களை குறைக்க வேண்டும் என்பதே ஆணைக்குழுவின் சிபார்சாகும் என்றார்.

# 28 அரசதுறை நிறுவனங்களில் ஊழல் லஞ்சஊழல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

**விசாரிக்கக்கோரும் மனித உரிமைகள் நிறுவனம்**

(கொழும்பு)

இருபத்தெட்டு அரச நிறுவனங்களில் இடம் பெற்ற லஞ்ச மற்றும் மோசடி சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்துமாறு கோரி, மனித உரிமைகள் நிறுவனம் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளது.

பல அரச நிறுவனங்களில் நிர்வாக, கேள்விப்பத்திரம் கோரல் மற்றும் செயற்பாடுகளின் போது அரசாங்க நிதி பல்வேறு ஊழல், மோசடிகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதாக மனித உரிமை நிறுவனம் இந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது.

பல அரச நிறுவனங்களில் அரசாங்கத்தின் அடிப்படை கொள்கை மற்றும் திறைசேரி சுற்றறிக்கைகளை மீறும் வகையில் பல வழிகளில் மோசடி நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளதாக தமக்கு அறியக் கிடைத்திருப்பதாக மனித உரிமைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் ரசாக் சமரசேகர கூறியுள்ளார்.

இதன் காரணமாகவே குறிப்பிட்ட அரச நிறுவனங்களுக்கு எதிராக லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் தமது நிறுவனம் முறையீடு செய்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஏ-9 வீதியூடாக 24 மணிநேரமும் செய்தியாளர்களை அனுமதிக்குக!

## பத்திரிகையாளர் சங்கக் கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

தகவல் சேகரிக்கச் செல்லும் செய்தியாளர்கள் எந்த நேரமும் கண்டி வீதி ஊடாகப் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும் என நேற்று நடைபெற்ற வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் செய்தியாளர்களால் இப்பிரச்சினை முன்வைக்கப்பட்டது.

கண்டி வீதி - மக்கள் போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டதைத் தொடர்ந்து, வன்னிப் பிரதேசத்தில் நடைபெறும் சந்திப்புக்கள், நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கு குடாநாட்டிலிருந்து செய்தியாளர்கள் சென்று வருகின்றனர்.

இவ்வாறு செல்லும் செய்தியாளர்கள் தகவல்களைச் சேகரித்துக் கொண்டு உரிய நேரத்திற்கு வரமுடியாதுள்ளது. கண்டி வீதி மாலை ஐந்து மணியுடன் மூடப்படுவதால் அவ் வீதியூடாக உடனடியாக திரும்பிவரப் படையினர் அனுமதிப்பதில்லை.

தகவல் தொழில்நுட்பம் வளர்ந்துள்ள இக்காலத்தில் குடாநாட்டு மக்களுக்கு உடனடியாக தகவல் வழங்க முடியாதுள்ளது.

தொலைபேசி வசதிகள் அற்ற வன்னிப் பிரதேசச் செய்தியாளர்களால் உடனடியாகத் தகவல்களை வெளியிட முடியாதுள்ளது.

எனவே, வன்னிப் பிரதேசத்தில் தகவல் சேகரிக்கச் செல்லும் பத்திரிகையாளர்கள் காலதாமதமின்றி கண்டி வீதியூடாக எந்த நேரமும் சென்று வருவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கோருவது என இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

குடாநாட்டு செய்தியாளர்கள் எதிர்நோக்கும் இவ்வாறான பிரச்சினைகளைத் தெரியப்படுத்தும் கடிதத்தை - பிரதம மந்திரி, பாதுகாப்பு அமைச்சர், ஊடகத்துறை அமைச்சர், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, தமிழீழ விடுதலைப் புலிகள், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி ஆகியோருக்கும் அனுப்புவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. (ச,111)

# கைதடிப் பாலத்தை அண்டிய வீதியை செப்பனிடுமாறு கோரிய படையினர்

(சாவகச்சேரி)

கைதடிப் பாலத்தினை இணைக்கும் கண்டி வீதியின் ஒரு பகுதியினை, உடன் திருத்தியமைக்க உதவுமாறு இராணுவத்தினர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையைக் கேட்டுள்ளனர்.

கடந்தகால யுத்த அனர்த்தங்களின்போது முழுமையாக உடைந்திருந்த இப்பாலத்தினை இராணுவத்தினர் தற்காலிகமாக அமைத்திருந்தனர். ஆனால், தற்போது இப்பாலத்தினை அண்டிய வீதியின் ஒரு பகுதியிலேயே உடைவுகள், சிதைவுகள் ஏற்படுகின்றன. இதனால் பாலத்தினைப் பாதுகாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதனை நேரில் சென்று பார்வையிட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர், உடனடியாக இதனைத் திருத்தி அமைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (24)

# வட- கிழக்குப் பகுதி வீடமைப்புக்கு இரண்டு மடங்கு நிதி தேவை!

வீடமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் போது, வடக்கு-கிழக்குப் பிரதேசங்களுக்கு இரண்டு மடங்கு நிதியை ஒதுக்க வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் பஷீர் சேகுதாவூத் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

வீடமைப்பு, தோட்ட, உட்கட்டமைப்பு அமைச்சுக்களின் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டுக் குழுநிலை விவாதத்தின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்.நூலகம் அழிக்கப்பட்டமை தேசத்துரோகமாகும். அழிக்கப்பட்ட கட்டடத்துக்குப் பதிலாக புதிய கட்டடம் நிர்மாணிப்பதற்கு முடிந்துள்ளபோது அழிந்துபோன விலை மதிக்கமுடியாத நூல்களை சேகரிப்பதற்கு நீண்ட காலம் செல்லும் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு தசாப்பதங்களில் வடபகுதியில் பெருமளவு வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் சபையில் தெரிவிக்கப்பட்டது.

# தமிழ் மக்களிடம் நம்பிக்கை ஏற்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்தின் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது!

*மன்னார் மறை மாவட்டத்தின் ஆயர் மேதகு இராயப்பு யோசெப் ஆண்டகை நமது ஈழநாட்டுக்கு வழங்கிய சிறப்புச் செவ்வியிலிருந்து...*

*கேள்வி:* யுத்த அனர்த்தங்களால சீரழிந்து போன தேசத்தில் இயல்புச் சூழ்நிலையை எப்படி உருவாக்குவது?

*பதில்:* ஜனநாயகத்தைப் பற்றியும், மக்களுடைய மனித உரிமைகள் பற்றியதுமான சுதந்திரமான அரசியற் சூழலை உருவாக்குவதுடன் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள், மீள்குடியேற்றங்கள், அரசியல் பற்றியதான மக்களுடைய எண்ணக் கருத்துக்கள் - இயல்புநிலையை உருவாக்கலில் எதிரொலிக்கப்பட வேண்டும். ஆகவே, மக்களை அதற்காகக் கலந்தாலோசிக்க வேண்டும். அதற்குரிய அமைப்புகளை மக்கள் மத்தியிலிருந்து மாவட்ட ரீதியாக, பிரதேச செயலர் பிரிவு ரீதியாக, கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாகவும் அமைக்க வேண்டும்.

அது மக்கள் அமைப்பாக செயறபட வேண்டும். அதைக் கொண்டு விசேட நிர்வாகக் குழு அமைக்கப்பட்டு, தமது பிரச்சினைகள் தொடர்பான இறுதித் தீர்மானத்தை - சமாதான உப குழுக்களுக்கு அனுப்பி அதனூடாக பிரதம மந்திரிக்கும், தேசியத் தலைவருக்கும் எடுத்துக் கூறி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதன் அடிப்படையில் தான் - முரண்பாடுகளுக்கான கற்கைகள்நெறி என்ற அமைப்பொன்றை ஏற்படுத்தினோம். அது மக்கள் குரலை வெளிக்கொணருவதாக இருந்தது. அதுவே அதனுடைய நோக்கம். அதியுயர் பாதுகாப்பு வலயம் பற்றியும், மக்களுடைய பிரச்சினைகள் பற்றியும் இரு தரப்பினதும் நியாயங்களை ஏற்றுக் கொண்டு - சமாதானத்துக்கான வரையறைகளைக் குறைத்துக் கொண்டு, மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்தி - தமது சொந்த மண்ணில் நிம்மதியாக மக்கள் வாழ்வியலை அமைக்க வேண்டும். மக்கள் தமது சொந்த இடங்களில் நிம்மதியாக வாழும் நிலை ஒன்று உருவாகினால் மாத்திரமே சமாதானத்தின் முழுப்பயன்களையும் அடைய முடியும். இதுவே இன்று மிக அவசியமான பணியாகும்.

*கேள்வி:* மன்னார் மாவட்டத்தில் தற்போது உள்ள நிலைமைகள் பற்றி...?

*பதில்:* மன்னார் மாவட்டத்தில் நாம் சகஜ நிலையை ஏற்படுத்துவதற்கு பல வழிகளாலும் முயற்சித்து வருகிறோம். அரச தரப்பில் இருந்து அதாவது - பாதுகாப்பு அமைச்சில் இருந்தும், புனர்வாழ்வு




அமைச்சில் இருந்தும், உள்துறை அமைச்சில் இருந்தும் உயர் அதிகாரிகளை அழைத்து - அரச அதிபர் உள்ளிட்ட மதகுருமார்கள் அனைவரும் ஒன்றிணைந்து, மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றோம். அதாவது பாதுகாப்பு வலயத்தில் இருந்து ஒரு மைல் தூரம் வரையாக மீளக் குடியமரவும், விவசாயம் செய்யவும் ஏற்றவாறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க, நடவடிக்கை எடுப்பதுடன், பொது இடங்களில் கலந்துரையாடல்களை நடாத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதன் மூலம் சகஜ நிலைமைகளை ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கிறோம்.

*கேள்வி:* தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பிற்கு மக்களிடமிருந்து எழுந்துள்ள உணர்வலைகளைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

*பதில்:* இது தொடர்பாக மன்னார் பகுதி மக்கள் அனைவரும் அணிதிரண்டு மகஜர் ஒன்று கையளித்தோம். மிகவும் பயங்கரமான இந்தப் பயங்கரவாதத் தடைத் சட்டத்தை உடனடியாக நீக்குவதற்கு வழி வகுக்க வேண்டும். அதேவேளை இந்தச் சட்டத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட நமது தேசியத் தலைவருடைய நீதிமன்றத் தீர்ப்பு உயர் நீதிமன்றத்தில் இருந்து வாபஸ் பெறப்பட ஆவன செய்ய வேண்டும் என, சட்டமா அதிபருக்கும் மற்றும் அதனோடு தொடர்புடையவர்களுக்கும் பிரதிகள் அனுப்பியிருக்கிறோம்.

பயங்கரவாதத்துக்கு எதிரான தடைச்சட்டம் முற்றாக வாபஸ் பெறப்பட வேண்டும் என பல அமைப்புகளுடன் சேர்ந்து - சமயத் தலைவர்கள் எல்லோரும் கையெழுத்துத் திரட்டி அனுப்பினோம். தீர்ப்புக்கு எதிரான கோரிக்கைகளை விடுப்பதுடன், மக்களுக்கும் அது தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி, மக்கள் மத்தியில் செல்லுபடியானதான ஆதரவினைத் திரட்டவுள்ளோம். இந்தத் தீர்ப்பு மனித இனத்திற்கே கேடு விளைவிப்பதான, உரிமைகளை மறுக்கின்ற தீர்ப்பாக உள்ளது.

எல்லா இன மக்களிடத்திலேயேயும் இருந்து ஆதரவுகளைத் திரட்டி பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாமல் ஆக்கலாம். சட்டத்தைக் கையாண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாமல் ஆக்கினால் இன்று சிறைகளில் வாடும் பல தமிழ் இளைஞர்கள் விடுதலை பெற வாய்ப்புகள் உள்ளன. விடுதலைப் புலிகளின் தலைவர் மீதான தீர்ப்பும் இந்த வகையில் பாரபட்சமானதொன்றே. இந்தத் தீர்ப்பு சமாதானத்திற்கு எதிரான கசப்பான சம்பவமாகும்.

*கேள்வி:* சமாதானச் சூழலை மேலும் ஸ்திரமாக்குவதற்கு அரசு என்ன முயற்சிகளை மேற்கொள்ளலாம்?

*பதில்:* அரச படைகள் தமது நல்லுறவை மக்கள் மத்தியில் ஏற்படுத்த நிறையச் செய்தாக வேண்டும். கடந்த காலங்களில் ஏற்பட்ட அனுபவங்களால் மக்கள் மத்தியில் நிலவும் ஆழமான எதிர்ப்புணர்வை மாற்றுவதற்கு அவர்கள் முயற்சி எடுக்கவேண்டியுள்ளது. இதே நிலைதான் அரசாங்கத் தரப்பிடமும் உள்ளது. தமிழ் மக்களோடு உண்மையான சகஜநிலையை உருவாக்கக் கூடியவாறு மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ள அவர்கள் முன்வர வேண்டும்.

மற்றும் சிங்கள மொழி தான் எல்லா நிகழ்வுகளிலும் அரசாங்கத்தால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அரச சுற்று நிருபங்களில் 50 வீதமானவை சிங்களத்தில்தான் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அதைச் சீர்படுத்த வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம்தான் நாங்களும் சமத்துவமான பிரஜைகள் என்கின்ற உணர்வு, தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படும். அதுமட்டுமன்றி அரசியற் கட்சிகள் எதுவாக இருந்தாலும் வன்செயலுக்குத் தங்களை உட்படுத்திக் கொள்ளும் செயல்கள் கண்டிக்கப்படவேண்டும். அரசாங்கம் இவ்விடயத்தில் தெளிவான கொள்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

மக்களுடைய உணர்வுகளுக்கு முதலிடம் கொடுத்துத்தான் அரசியல் நடத்தப்பட வேண்டும். மக்கள் தான் ஆட்சிபுரிய வேண்டியவர்கள், மக்களுக்காகக் குரல் கொடுப்பவர்களாகத்தான் அரசியல்வாதிகள் செயற்பட வேண்டும். மனித உரிமை மீறல்களும், ஜனநாயகம் இன்மையும் தொடர்ந்து நிலவுமாயின் - அது ஆயுதமும், அதிகாரமும் தாங்கிய போராகவே இருக்கும்.



மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசெப்

எனவே மக்கள் மத்தியில் போரின் தாக்கங்களைக் குறைத்து, நாட்டில் சுமுக நிலையை ஏற்படுத்தும் பாரிய பொறுப்பை அரசாங்கம் மிக அவதானத்துடன் செய்ய வேண்டும்.

இன்று மலர்ந்துள்ள சமாதானச் சூழலை தக்கவைத்து மீண்டும் போரோ வன்முறைகளோ ஏற்படாத வண்ணம் தகுந்த வழிமுறைகளை அரசாங்கம் கையாள வேண்டும். மக்களிடம் நம்பிக்கை ஏற்படுத்தப் பட்டாலே, அது அரசாங்கத்தின் மீதும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் மீதும் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு வழிதருவதாக அமையும்.

**நேர்காணல்: கணேஷ்**

---

# மழைக் காலத்தில் கவனமாயிருக்க சில வழிமுறைகள்

நீர் பல்வேறு நோய்களின் பரவலுக்கு ஊடகமாக அமைவது யாவரும் அறிந்த விடயம். உடலுக்குப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் நோய்களும், இறப்புக்குக் காரணமான நோய்களும் இவற்றுள் அடங்கும். நீரால் கடத்தப்படும் தொற்று நோய்கள், பரவும் சாத்தியக்கூறுகள் அதிகமாகவுள்ள மழைக்காலத்தில் அவற்றைப் பற்றிச் சிந்திப்பதும், அவதானமாகவிருப்பதும் அவசியமாகும்.

நீரால் பரவும் நோய்க்கிருமிகள் பிரதானமாக பற்றீரியா வகையைச் சார்ந்தவை. யாழ்ப்பாணத்தில் பிரதா னமாகக் காணப்படும் நீரால் பரவும் நோய்களுள் - வாந்திபேதி (கொலரா), நெருப்புக் காய்ச்சல், உணவு நஞ்சூட்டல், பசிலசு வயிற்றுளைவு, அமிபா (புரட்ட சோவன்) வயிற்று ளைவு, பிற வயிற்றோட்டம், வயிற்று ளைவு என்பன அடங்கும். இவற்றுள் காலத்திற்குக் காலம் பெருக்கத்தைக் காட்டும் கொலராவும், நெருப்புக் காய்ச்சலும் மிக ஆபத்தான நோய்கள்.



### வாந்திபேதி (கொலரா)

இது ஒரு உயிர்கொல்லி நோய். 1994 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வெகுவேகமாகப் பரவி பல உயிர்களைப் பறித்தது பலரிற்கு ஞாபகமிருக்கலாம். மிக அண்மையில் கூடப் பலர் கொலராத் தாக்கத்திற்கு உள்ளானார்கள். அதன் மேலதிக பெருக்கமானது கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், அவ்வப்போது பரவலாகக் கொலரா நோய் இன்னும் எம்மிடையே இருந்து கொண்டுதானிருக்கிறது.

இந்நோய் **Vibrio cholerae** எனப்படும் ஒருவகை பக்றீரியாவினால் ஏற்படுகின்றது. இப் பக்றீரியா, நோயாளியின் மலத்திலிருந்து நீர்நிலைகளை அடைகின்றது. பின்பு, இந் நோய்க் காரணி, நீரில் நன்கு பெருகி, பலகாலம் தப்பி வாழும் ஆற்றல் உடையது. இது நம் உணவை அல்லது குடிநீரை நேரடியாகவோ, மறைமுகமாகவோ வந்தடையலாம்.

இந்நோயின் நோயரும்பு காலம் சில மணித்தியாலங்கள் முதல் 6 நாட்கள் வரை வேறுபடலாம். இதன் முக்கிய அறிகுறிகளாவன - தொடர்ச்சியான வயிற்றோட்டமும் வாந்தியுமாகும். மலம் கஞ்சி போன்ற திரவமாகக் காணப்படும். மிக அதிகளவில் வெளியேறும். துர்நாற்றம் வீசாது. இரத்தமும் காணப்படாது. நோயாளி மிகக் கடுமையான நீரிழப்பிற்கு உள்ளாகியிருப்பார். இதனால் மெலிந்த, தோல் சுருங்கிய, குழிவிழுந்த கண்களை உடையவராகக் காணப்படுவார். பசியின்மையும், களைப்புத் தன்மையும் காணப்படும். இக்கடுமையான நீரிழப்பானது சிறுநீரகப் பாதிப்பை ஏற்படுத்தி இறப்பிற்குக் காரணமாக அமையலாம்.

இறப்புகள் முழுமையாக கட்டுப்படுத்தக்கூடிய ஒன்று. சரியான முறையில், சரியான நேரத்தில் சிகிச்சை அழிப்பதன் மூலம் இந்நோயால் ஏற்படும் பாதிப்பையும், இறப்பையும் கட்டுப்படுத்தலாம். உடனடியாக வைத்தியசாலைக்கு நோயாளியைக் கொண்டு செல்ல முடியாதவிடத்து முதலுதவி அளித்தல் மிக அவசியமாகும். இது நீரிழப்பை ஈடு செய்ய உதவி செய்யும்.

ஒரு பக்கட் ஜீவனியை 5 டம்ளர் அல்லது ஒரு லீற்றர் நீரில் கரைத்து, 24 மணித்தியாலத்திற்கு மேலாகக் காலம் தாழ்த்தாமல், குடிக்கக் கொடுக்க வேண்டும். 24 மணித்தியாலத்திற்கு மேற்படின் புதிதாகக் கரைக்கவும். ஜீவனி இல்லாத பட்சத்தில்- வேண்டியளவு தண்ணீரில் குளுக்கோசையோ அல்லது சீனியையோ கரைத்து - சிறிதளவு உப்புச் சேர்த்துக் குடிக்கக் கொடுக்கவும்.

இளநீரில் சிறிதளவு சீனி இட்டும் கொடுக்கலாம்.

வயிற்றோட்டமும் வாந்தியும் 2 நாட்களுக்கு மேலதிகமாக நீடிப்பின், உடனடியாக நோயாளியை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வது அவசியமாகும். ஏனெனில் கடுமையான நீரிழப்பு மரணத்துக்கு இட்டுச் செல்லும்.

**A.லதாகரன்,**
**மருத்துவபீடம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

---

# இடம் பெயர்ந்த மக்களின் ஆதன உரிமைகள் தொடர்பாக விரைவில் விசேட செயற்திட்டம்

## மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மக்களின் ஆதன உரிமைகள் தொடர்பாகவும் அடிப்படை மனித உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாகவும் விசேட செயற்திட்டம் ஒன்று உருவாக்கப் படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்டு வருகின்றது. மிக விரைவில் இச்செயற்திட்டம் யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இச் செயற்திட்டத்தின் கீழ் ஆதன உரிமைகள் தொடர்பான சட்ட உதவிகள் மற்றும் நிவாரண, புனர்வாழ்வு உதவித் திட்டங்களில் இணைந்துகொள்வதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்ளல் போன்ற பல அம்சங்கள் அடங்கியிருக்கும் எனத் தெரியவருகிறது.

(க,லி)

# தென்மராட்சியில் 580 குடும்பங்களுக்கு பதினையாயிரம் ரூபா கொடுப்பனவு!

(கொக்குவில் மேற்கு)

நாவற்குழி, கைதடி, கோவிலாக் கண்டி ஆகிய பகுதிகளில் மீளக் குடியமர்ந்துள்ள 580 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்வுக் கொடுப்பனவாக 15 ஆயிரம் ரூபா வழங்கப் படவுள்ளது.

படையினர் விலகிய பிரதேசங்களில் தற்சமயம் மீளக்குடியமர்ந்து வரும் இந்தக் குடும்பங்கள், வீடுகளைத் திருத்தவும் மற்றும் பாவனைப் பொருட்களைக் கொள்வனவு செய்யவுமே இக்கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. (108)

# சாவகச்சேரி நவீன சந்தை கட்டட புனரமைப்பு வேலை இடைநிறுத்தம்

(மீசாலை)

யுத்தத்தினால் சேதமடைந்துள்ள சாவகச்சேரி சந்தை கட்டட வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வடக்கு புனர்வாழ்வு, மீள் குடியமர்வு அதிகார சபையினால் ஒதுக்கப்பட்ட நிதியிலேயே திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவந்தன. எனினும் ஒப்பந்த வேலைகள் பூர்த்தியடைய முன்னரே ஒப்பந்தக்காரர்கள் தமது பணியை இடைநிறுத்தியுள்ளனர்.

இதனால் அப்பகுதி மக்களும், வர்த்தகர்களும் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்றே குடாநாட்டின் பல பகுதிகளிலும் வடக்கு புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்ட பல திட்டங்கள், அச்சபை கலைக்கப்பட்டதால் - இடைநடுவில் பூர்த்தியாக்கப் படாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. (25)

# சிங்கள தேசத்தினால் எம்மை ஏமாற்ற முடியாது; ஏமாற்றினால் நாம் பிரிந்து போய் விடுவோம்!

## லண்டன் மாவீரர் நாள் நிகழ்வில் அன்ரன் பாலசிங்கம்

**லண்டன் அடுனா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் உரையாற்றினார். சுமார் 75 நிமிடநேரம் நீடித்த அவரது உரை இங்கு தரப்படுகின்றது.**

சிங்களதேசம் சமாதானத்தில் காதல் கொண்டு புலிகளுடன் உறவாட வேண்டுமென்று வரவில்லை. அவர்களுக்கும் பல நிர்ப்பந்தங்களும் நெருக்கடிகளும் எழுந்தன.

ஆயுதப் போராட்டத்தில் எமது இயக்கம் நிலைநாட்டிய சாதனைகள், ஓயாத அலைகளாக விழுந்த மரணஅடிகள், அக்கினிச் சுவாலை என மிகப்பெரிய ஆயத்த முஸ்தீபுகளுடன் நடாத்தப்பட்ட படையெடுப்புச் சிதறடிக்கப்பட்டதால் ஏற்பட்ட அழிவு, மிகவும் பாதுகாப்பான அரணுக்குள் இருந்த கட்டுநாயக்க விமானத் தளத்தினுள் எமது போராளிகள் புகுந்து நடாத்திய அனர்த்தம், அதனால் ஏற்பட்ட பேரழிவு காரணமாக சிங்கள தேசம் இரண்டு முடிவுகளுக்கு வந்தது.

போரில் புலிகளை யாராலும் வெல்லமுடியாது. சிங்கள தேசத்து பொருளாதாரம் சிதைக்கப்பட்டதால் போரைத் தொடர முடியாத நிலை. இப்படியான நிலையில்தான் பேச்சுவார்த்தைகளுக்கு முன்வந்தார்கள்.

நாம் பலமான இராணுவ சமபலத்துடன் சாதகமான புறநிலையிலேயே பேச்சுக்கு முன்வந்துள்ளோம். சமாதான வழியைப் பின்பற்றுகின்றோம். இராணுவ ரீதியில் பலமாக உள்ளதுடன் தமிழ் மக்களும் எம் பின்னே உள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்குச் செல்லுமாறு உலகம் எம்மை மிரட்டவோ பயமுறுத்தவோ இல்லை. அழிக்க வரவில்லை. சமாதான வழியில் தீர்க்கமுயலுமாறு ஆலோ சனை தெரிவித்தார்கள். புலிகளை தமிழீழ மக்களது பிரதிநிதிகளாக ஏற்று அவர்களுடன் பேசுங்கள் என்றே சர்வதேச நாடுகள் கூறின.

சிங்கள தேசம் பொருளாதார ரீதியில் குட்டிச்சுவராகி இராணுவம் களைத்த நிலையிலேயே, ரணில் விக்கிரமசிங்க சிங்கள மக்கள் ஆணையைப்பெற்று பேச்சுவார்த்தைக்கு முன்வந்துள்ளார். எமது தலைவரும், தனது மாவீரர் தின உரையில் சமாதான வழிமூலம் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பது சாத்தியமானால் முழுமனதுடன் முயன்று பார்க்கத் தயாரென்று கூறியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளே ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்தத்தை அறிவித்து சமாதான பேச்சுவார்த்தைக்கான கதவுகளை அகலத் திறந்தார்கள்.

கடந்த வருடம் செப். 11இல் அமெரிக்காவில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் உலக நாடுகளின் பார்வையில் அடிப்படை மாற்றம் நிகழ்ந்திருக்கிறது.

சுதந்திரம் வேண்டி நடைபெறும் ஆயுதப் போராட்டத்திற்கும் குருட்டுத்தனமான பயங்கரவாதத்திற்கும் மத்தியிலான வரையறைகள் அழிக்கப்பட்டு விட்டன. வன்முறை வடிவிலான சகல போராட்டங்களும்- அது தற்காப்புப் போராட்டமாக இருக்கலாம், விடுதலைக்கான போராட்டமாக இருக்கலாம். என்ன போராட்டமானாலும் - அது வன்முறை தழுவியதாக இருந்தால் அது பயங்கரவாதமென்ற முத்திரை குத்தப்படுகிறது. இந்த நிலையில் நாம் மிகவும் கவனமாக, நுட்பமாக எமது போராட்டப்பாதையை செப்பனிட வேண்டும்.

ஏனெனில், உலகம் யதார்த்தமாக உண்மை நிலையைப் பார்க்க தவறிவிட்டது. எமது போராட்டத்தின் நியாயப்பாட்டை, தர்மத்தை உலகநாடுகள் உணர்ந்து ஏற்கப் போவதில்லை. எனவே, நாங்களும் எமது போராட்டப் பாதையை உலக வரலாற்றின் ஓட்டத்துக்கேற்ப, அனுசரித்துப் போகவேண்டுமென்றே தலைவர் மாவீரர் உரையில் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளும் ஏனைய உலக நாடுகளும் ஒன்றிணைந்து கூட்டாகப் பயங்கரவாதத்திற்கு எதிரான அணியைத் திரட்டி, ஆயுதங்களை குவித்து யாரின் தலையிலாவது கொட்டலாமென்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். சில நாடுகளின் பட்டியலில் புலிகளின் பெயரும் குத்தப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் நாம் மிகவும் கவனமாக, நிதானமாக உலகப் போக்கிற்கேற்ப, அரசியல் இராஜதந்திரக் காய்களை நகர்த்த வேண்டும். இல்லாவிடில் எதிர்காலத்தில் எங்களை அழிப்பதற்கு உலகம் பின் நிற்காது.

இந்தப் பின்னணியில் ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆணையைப் பெற்று - விடுதலைப் புலிகளுடன் பேசுவேன், கொடிய யுத்தத்திற்கு முடிவு கட்டுவேன், இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுக்கு முயற்சிப்பேன் என்று கூறி ஆட்சிபீடமேறுகிறார்.

இப்படி உருவான சமாதானப் புறநிலையை எப்படிக் கையாள வேண்டும் என்ற சவால் எமக்கும் ஏற்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒரு போதுமில்லாதவாறு சர்வதேச கண்காணிப்புடன் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. பலமான, ஸ்திரமான போர்நிறுத்த அத்திவாரத்துடன் பேச்சுவார்த்தை படிப்படியாக முன்னேறி வருகிறது.

நாம் சமாதானப் பாதையைத் தழுவ இன்னொரு காரணம் - இருபது வருடங்களாக தொடர்ச்சியாக முடிவில்லாத யுத்தம் தொடர்ந்ததால், மக்களுக்குத் தாங்கமுடியாத வாழ்க்கைப் பிரச்சினையை ஏற்படுத்தியது. போரைச் சாக்காக வைத்து ஸ்ரீலங்கா ஆயுதப்படைகள் தமிழர் தேசத்தை படிப்படியாக அழித்து சமூகக் கட்டுமானத்தைச் சிதைத்தன.

புலிகளை அழிக்கின்ற போர்வையில், தமிழ் மக்களின் நகரங்கள், பாரம்பரியக் கிராமங்கள் அழிக்கப்பட்டன. மாவீரர் உரையில் தலைவர் குறிப்பிட்டது போல, தமிழர் பிரதேசத்தில் வேரூன்றி வளர்ந்த பண்டைய நாகரிகம் வேரோடு சரிக்கப்பட்டது.

திட்டமிட்டு விமானம் மூலம் அழிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். மக்களை நிரந்தரமான அவலத்தில் வைத்திருக்க முடியாது.

கடந்த 20 வருடங்களாக போரில் நாம் சாதனைகள் படைத்து எம்மை வெல்லமுடியாது எனச் சிங்கள தேசத்திற்கும் உலகத்திற்கும் உணர்த்தியுள்ளோம்.

யாழ். குடாநாட்டில் 40 ஆயிரம் படையினர் பொதுமக்களின் வீடுகள், பாடசாலைகளில் தங்கி உயர் பாதுகாப்பு வலயங்களைப் பிரகடனப்படுத்தியிருப்பதால் மக்கள் திறந்தவெளிச் சிறைக்கைதிகளாக வாழ்கிறார்கள். கேந்திர முக்கியத்துவமுள்ள இடங்களில் முகாம்களை அமைக்காது, பொதுமக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் அமைத்து, மக்களைக் கேடயங்களாகப் பாவிக்கிறார்கள். வீடுகள், தெருக்களுக்குப் பக்கத்தில் இருக்கிறார்கள்.

மக்கள் வீடுகளுக்குச் சென்று குடியேற, பாடசாலைகளைக் கல்வி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த, கோவில்களில் வழிபாடுகள் இடம்பெற - இராணுவத்தினர் வெளியேற்றப்பட வேண்டும். இதற்குச் சமாதானம் தேவை. ஒரு போர் நிறுத்த ஒப்பந்தம் தேவைப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் ஆலயங்கள், பாடசாலைகளில் சில இடங்களில் வெளியேறிய படையினர் - அருகில் முகாம் அமைத்து இருக்கிறார்கள். போவதற்கு வேறு இடம் இல்லை என்கிறார்கள். தென்னிலங்கைக்குக் கொண்டு சென்றால் படையிலிருந்து விலகி விடுவார்கள் என்ற பயம் . சிலர் ஓடியுள்ளனர். இதனால் படையினருக்கு லீவு கொடுப்பதில்லை. குடும்பத்தினர் யாழ். சென்று சந்தித்து வருகின்றனர்.

பத்து வருடங்களாகத் தமிழர் தாயகத்தில் திணிக்கப்பட்ட பொருளாதாரத் தடை நீக்கப்பட்டது. வன்னியில் பொருளாதாரத் தடையின் அவலத்தை நேரடியாக அனுபவித்தவன் நான். மீன்பிடி, போக்குவரத்துத் தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

படையினரை முற்றாக விலகுமாறு அரசுக்கு நெருக்கடி கொடுத்து வருகிறோம்.

மக்களை மீளக் குடியமர்த்த கோடிக்கணக்கான பணம் தேவை. இதனாலேயே - புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், மீள் குடியேற்றம் தொடர்பான உபகுழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒஸ்லோ மாநாட்டின் பின்னர் நிதி உதவி கிடைத்துள்ளது.

இலங்கை அரசுடன் சேர்ந்து மீள்குடியேற்றம் தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். போர் நெருக்கடியை தணித்து இயல்புநிலையை ஏற்படுத்துவது தொடர்பான குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றுமாறு கோரும் உபகுழுவும் பேச்சுக்களை நடாத்தி வருகிறது.

தலைவரின் மாவீரர் தின உரையை, சிங்கள தேசத்திலுள்ள சிலர் தமக்கேற்றபடி பிழையான வரைவிலக்கணங்களை கொடுத்து வருகிறார்கள். ஆனால் எம்மைப் பொறுத்தவரை அன்றும் சரி, இன்றும் சரி ஒரே இலட்சியத்துடனேயே இருந்து வருகிறோம்.

ஐ.நா. பிரகடனத்தின் படியான சுயநிர்ணய உரிமைப்படியே எமது கொள்கைத்திட்டம் உள்ளது. சர்வதேச சட்டத்தின் மூலம் எமது போராட்டத்தை நெறிப்படுத்தினாலே சர்வதேச ஆதரவு கிட்டும். சும்மா உணர்ச்சி வசப்பட்டு சுலோகங்களை எழுப்புவதில் அர்த்தமில்லை. உலகம் ஏற்றுக்கொண்டபடி சர்வதேச நாடுகள் ஏற்றுக்கொள்ளும் சட்ட நியமங்கள், சாசனங்களின் அடிப்படையில் கொள்கை திட்டம் வகுத்தாலே உலகம் ஏற்றுக்கொள்ளும்.

இதன்படியே - தமிழரின் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். இந்த மூன்று கோட்பாடுகளின் அங்கீகாரத்தின் அடிப்படையில்தான் தீர்வுத் திட்டம் முன் வைக்கப்பட வேண்டும். இந்த அடிப்படையில் பேசத் தயாரென்று காலம் காலமாக வலியுறுத்தி வருகின்றோம். தமிழ் மக்களின் அபிலாஷையும் அதுதான்.

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் வரலாற்று நிலம். கிழக்கு வாழ் முஸ்லிம்களின் தாயக நிலமென்றும் ஒப்புக்கொள்கிறோம்.

தமிழ் மக்கள் சிறுபான்மைக் குழுவல்ல. தேசிய இனத்திற்குரிய பண்புண்டு. இனத்துவப் பிரக்ஞை உண்டு.

சுயநிர்ணய உரிமை காலத்திற்குக் காலம் வளர்ந்து வரும் கோட்பாடு. முன்பு சர்வதேச சட்ட விதியாக இருந்தது. இப்போது அனைத்துலக மக்களின் மனித உரிமையாகவுள்ளது.

உள்ளீடான சுயநிர்ணய உரிமை அடிப்படையில் எமது மக்கள் தம்மைத் தாமே ஆளும் நிலையை ஏற்படுத்த வேண்டும். இதற்கு வழி கிடைக்காவிட்டால் தனி அரசை அமைப்பதே வெளியீடான சுயநிர்ணய உரிமை.

பிரதேச சுயாட்சி தரப்படாவிட்டால், பிரிந்து சென்று தனியாட்சி அமைப்பதே எமது நிலைப்பாடு.



இவ்வருட மாவீரர் தின உரையில் பிரதேச சுயாட்சியை தலைவர் மாற்றுத்திட்டமாகக் குறிப்பிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பிரதேச சுயாட்சி - சமஷ்டி, இரட்டை ஆட்சி மொடல்களில் உள்ளது. பந்து இப்போது சிங்களத் தரப்பிடம் வீசப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் - பிரபாகரன் தனி நாட்டுக் கோரிக்கையிலிருந்து இறங்கிவிட்டார். தாமும் அத்தீர்வைக் கொடுக்க விரும்புவதாக அறிக்கை வெளியிட்டுள்ளார். ஆனால் அவருக்கு நாம் என்ன கேட்கிறோமென்று புரியவில்லை. நாம் பரிபூரண சுயாட்சியைக் கேட்கிறோம்.

சிலர் என்னிடம் கேட்கிறார்கள். செல்வநாயகமும் சமஷ்டியைத் தானே கேட்டார். ஏமாற்றி விட்டார்கள். நீங்களும் அதையேன் கேட்கிறீர்கள் என்று. அவர்கள் ஏமாற்ற வேண்டும். அதையே நாம் எதிர்பார்க்கிறோம். செல்வநாயகம் அவ் வறிக்கையை ஆயுதமாக வைத்திருந்தார். நாம் பீரங்கிகளை வைத்திருக்கிறோம். சிங்கள தேசத்தினால் ஏமாற்ற முடியாது, ஏமாற்றினால் பிரிந்து போய்விடுவோம்.

தலைவரின் பேச்சுக்கு சர்வதேசரீதியில் வரவேற்பிருக்கிறது. புலிகள் பிரிவினைவாதிகள் அல்லர். அவ்வாறு கூறி, சிங்களதேசம் ஏமாற்றியதாக சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள். பேச்சுவார்த்தைக்கு அடித்தளம் இட்டுள்ளார் தலைவர்.

தமிழரின் தேசியப் பிரச்சினை இப்போது சர்வதேசப் பிரச்சினையாகிவிட்டது. வல்லரசு மட்டுமல்ல. உலக நாடுகள் அக்கறை காட்டி வருகின்றன. ஸ்கன்டினேவியா போரைக் கண்காணிக்கின்றது.

ஜப்பான் பேசக் கதவு திறந்துவிட்டது. தென்னாபிரிக்காவும் ஒப்புக்கொண்டு நெல்சன் மண்டேலா உற்சாகம் தருவதாகக் கூறியுள்ளார்.

பிலாவடி மூலையிலிருந்து ஜப்பான் வரை போகிறோம். இலங்கை இனப்பிரச்சினை இப்போது புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது.

- என்றும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்டார்.

## யாழில் ஆறு பகுதிகளுக்கு புதிதாக மின் விநியோகம்!

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் கிராமிய மின் வழங்கல் திட்டத்தின் கீழ் நேற்று ஆறு மின் வழங்கல் திட்டங்கள் புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

புத்தூர், நீர்வேலி, நிலாவரை, அளவெட்டி தெற்கு, உரும்பிராய், அராலி தெற்கு ஆகிய பகுதிகளுக்கே 24 மணிநேர மின் வழங்கல் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மின் விநியோகப் பணிகளை அமைச்சர் மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வீ.ஆனந்தசங்கரி, விநாயகமூர்த்தி ஆகியோர் கூட்டாக ஆரம்பித்து வைத்தனர்.

இந் நிகழ்வுகளில் மின்சார சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் முத்து ரட்ணானந்தமும் கலந்துகொண்டார். (80)

## நெல் ஆராய்ச்சி நிலையத்தை பரந்தனில் அமைக்கத் திட்டம்!

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பரந்தனில் புதிய நெல் ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கான ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்படி திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

வன்னிப் பிரதேசம் உட்பட வட பகுதியின் தரைத்தோற்றம் மற்றும் காலநிலை அம்சங்கள் கருத்தில் எடுக்கப்பட்டு, வடபகுதிக்கு மிகப் பொருத்தமான நெல் இனங்களை உற்பத்தி செய்வதற்காகவே, இப் புதிய நெல் ஆராய்ச்சி நிலையம் உருவாக்கப்படவுள்ளது.

மேற்படி நெல் ஆராய்ச்சி நிலையத்தை உருவாக்குவதற்கான செயற்திட்டம் ஏற்கனவே கிளிநொச்சி அரச செயலகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது. (க)

## மூடப்பட்டிருந்த ஆலயத்தில் பூசைகளுக்கு அனுமதி!

(அச்சுவேலி)

இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக மூடப்பட்டிருந்த இடைக்காடு மாணிக்கப்பிள்ளையார் கோவில் சூழலில் உள்ள மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகளை இராணுவத்தினர் அகற்றியுள்ளதுடன், பூசைகள் செய்வதற்கும் அனுமதி வழங்கியுள்ளனர்.

இந்து கலாசார அமைச்சு நீண்டகாலமாகத் தொடர்பு கொண்டதன் பிரகாரம், அமைச்சரின் தீவிர முயற்சியினால் மேற்படி ஆலயத்திற்குச் சென்று வழிபட அனுமதி பெறப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கதாகும். (76)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## யாழ்ப்பாண நகரப் பகுதிகளில்
# நடைபாதை வியாபாரிகளை அப்புறப்படுத்திய பொலிஸார்!

(யாழப்பாணம்)

யாழ்ப்பாணம் மரக்கறிச் சந்தைக் கட்டடத் தொகுதியில் இது வரை காலமும் இயங்கி வந்த நடைபாதை வியாபாரிகள் நேற்று பொலிஸார் மற்றும் மாநகரசபை அதிகாரிகளால் அங்கிருந்து முனீஸ்வரன் ஆலய வீதிக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

நேற்றுக்காலை இம்மரக்கறிச் சந்தைக் கட்டடத் தொகுதியில் வழமையான வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளவென, அங்கு பொருட்களை ஆயத்தம் செய்து கொண்டிருக்கையில் - திடீரென அப்பகுதிக்கு வந்த பொலிஸார், வியாபாரிகளை அங்கிருந்து முனீஸ்வரன் வீதிக்குச் செல்லுமாறு கேட்டனர். இதற்கு நடைபாதை வியாபாரிகள் மறுப்புத் தெரிவித்தபோது, பொலிஸார் இரு நடைபாதை வியாபாரிகளைத் தாக்க முற்பட்டிருக்கின்றனர்.

இந்தவேளை - யாழ். மாநகர சபை அதிகாரிகளும் ஊழியர்களும் அப்பகுதிக்கு வந்து நடைபாதை வியாபாரிகளை அகற்றும் முயற்சிகளில் ஈடுபட்டனர். நடைபாதை வியாபாரிகளின் கடை, தளபாடங்கள் மற்றும் பொருட்களை மாநகரசபை ஊழியர்கள் எடுத்து உழவு இயந்திரத்தில் ஏற்றி முனீஸ்வரன் வீதிப் பகுதியில் இறக்கினார்கள்.



அத்துடன் மரக்கறிச் சந்தைப் பகுதியை உடனே மாநகரசபை ஊழியர்கள் முள்ளுக்கம்பியால் சுற்றி அடைத்ததுடன், 'இப்பகுதியில் நடைபாதை வியாபாரம் தடை செய்யப்பட்டுள்ளது' என்ற வாசகமடங்கிய பலகையையும் நாட்டியுள்ளனர்.

(லி)

## தென்னாபிரிக்க அணியை வென்ற இலங்கைக் கிரிக்கெட் அணி!

(பெனோனி)

இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற சர்வதேச மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 7 விக்கட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கட்டுக்களை இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றது. ஜக்கலிஸ் 87 ஓட்டங்களையும் குளூஸ்னர் 60 ஓட்டங்களையும் பெற்றனர்.



குளூஸ்னர்



அத்தபத்து

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 41.4 ஓவர்களில் 3 விக்கட்டுக்களை மட்டும் இழந்து 258 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைப் பெற்றுக் கொண்டது. இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மாவன் அத்தப்பத்து ஒரு சிக்ஸர், 15 பவுண்டரிகள் அடங்கலாக 121 பந்துகளில் 123 ஓட்டங்களைப் பெற்றார். அரவிந்த டி சில்வா 10 பவுண்டரிகளுடன் 70 ஓட்டங்களைக் குவித்தார்.

நடந்து முடிந்துள்ள 3 போட்டிகளில் தென்னாபிரிக்க அணி 2:1 என்ற விகித்தில் முன்னிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம்களின் எதிர்காலம்...

இதனைக் குலைப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கையாக இதனைக் கருத வேண்டியுள்ளது எனவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கட்சி யாப்புக்கமைய தலைவர் இருக்கக் கூடியதாகவே உயர்பீடம் ஆராயவேண்டும். இல்லாத சந்தர்ப்பத்தில் இப்படி நடவடிக்கை எடுப்பது ஒரு கோழைத்தனமான விடயம். நேரடியாக விஷயங்களை நெறிப்படுத்த முடியாது. இப்படி நடந்து கொள்வது மிகவும் பிழையானது.

ஒஸ்லோ வருவதற்குமுன் கட்சியின் அரசியல் பீடம் கூடியபொழுது இந்த இருவரும் எவ்வித பிரச்சினைகளையும் ஏற்படுத்தவில்லை. நான் நாட்டை விட்டு வெளியேறி வந்தபோது அவர்கள் இப்படி நடந்து கொண்டது கட்சியின் ஸ்திரத்தன்மையை குலைப்பது போலுள்ளது.

இந்த உறுப்பினர்கள் நீக்கப்பட்டது ஒஸ்லோவில் நடக்கும் பேச்சுவார்த்தையைப் பாதிக்குமா எனக் கேட்கப்பட்டதற்குப் பதிலளித்த அமைச்சர் ஹக்கீம் -

பேச்சுவார்த்தையில் தாக்கம் ஒன்று ஏற்படும். ஆனால் பாதிக்க மாட்டாது. இது பற்றிப் பிரதம மந்திரியோடு தொடர்புகொண்டு பேசியுள்ளேன். இதனால் நான் நாடு திரும்பிப்போக வேண்டியுள்ளது. இதனால் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் சம்பந்தமாக எதுவும் ஆராய வேண்டாம் என்றுகூறி இருக்கின்றேன். அதற்கு அவர்கள் இணங்கியிருக்கிறார்கள்.

இருந்தபோதிலும் கட்சியின் உயர்மட்டக் கூட்டத்தை நடத்துவதில் அக்கறையாக இருக்கிறார்கள். இந்த நிலையில் கட்சியில் அதிக குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க முடியுமா எனப் பார்க்கின்றோம் என்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

## முஸ்லிம் காங்கிரஸ்...

ஹக்கீம் - ஒஸ்லோப் பேச்சுக்களுக்காக வெளிநாடு சென்றதைப் பயன்படுத்தி - கட்சியின் அதியுயர் பீடத்தைக் கூட்டி, ஹக்கீமை தலைவர் பதவியிலிருந்து அகற்றத் திட்டமிடப்பட்டது.

கிழக்கு- புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் நிறுவனமான 'ரேப்பியா'வின் தலைவர் - சுபைதீன் ஹாஜியாரைக் கட்சியின் தலைவராக்க, அதாவுல்லா திட்டமிட்டார்.

இதற்காக - குருநாகலைச் சேர்ந்தவரும், ஹக்கீமுக்கு நெருக்கமானவருமான கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் ஹஸ்ரத் உடன் இணைந்து - 23 பேர் கொண்ட கட்சியின் அதியுயர் பீடத்தில், 13 பேரைத் தனக்காதரவாகத் தேடிக் கொண்டார்.

இதையடுத்து நேற்றிரவு - முஸ்லிம் காங்கிரஸின் தலைமைச் செயலகமான 'தாருஸ்லாம்' இல்- அதியுயர் பீடம் கூட்டப்படுவதற்கான அழைப்பும் விடுக்கப்பட்டது.

ஆனால் - இவ்விடயத்தைத் தனக்கு விசுவாசமானவர்கள் மூலம், ஒஸ்லோவிலிருந்து அமைச்சர் ஹக்கீம் அறிந்து கொண்டார்.

உடனடியாக அவர் - அதாவுல்லாவையும் டாக்டர் ஹஸ்ரத்தையும் கட்சியை விட்டு நீக்குவதாக அறிவித்தார்.

சகல ஊடகங்களுக்கும் இச் செய்தி அறிவிக்கப்பட்டதுடன், தேர்தல் திணைக்களத்திற்கும் இது பற்றி உடனடியாகத் தகவல் அனுப்பப்பட்டது.

இதையடுத்து - முஸ்லிம் காங்கிரஸ், தற்போது அதாவுல்லா தலைமையிலும், ஹக்கீம் தலைமையிலுமாக இரண்டாகப் பிளவுபட்டுள்ளது.

இக்குழப்பம் - நேற்றிரவு கிழக்கு மாகாணத்திலும் எதிரொலித்ததாகவும், கட்சி உறுப்பினர்களிடையே சில இடங்களில் கைகலப்பு நடைபெற்றதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை - கட்சிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக, ஒஸ்லோவிலிருந்து அமைச்சர் ரவூப் ஹக்கீம் இன்று கொழும்பு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று ஆரம்பமாகும் சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றும் அரச தரப்புக்குழுவில் இடம்பெற்றிருந்த அமைச்சர் ஹக்கீம், ஒஸ்லோவிலிருந்து கொழும்பு திரும்பியதும் - முறுகல்நிலை இன்னும் தீவிரமாகலாம் எனக் கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மாநகர மேயர் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி

(அநுராதபுரம்)

மாநகர மேயர் கிண்ணத்துக்காக அநுராதபுரத்தில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டிகளில் யாழ். மாநகர சபை அணிக்கும் அநுராதபுர மாநகர சபை அணிகளும் இடையில் நடைபெற்ற போட்டி 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

நீர்கொழும்பு மாநகரசபை அணியுடனான ஆட்டத்தில் யாழ். மாநகர சபை அணி 5:2 என்ற கோல் கணக்கில் தோல்வி கண்டது.

## 'தாருஸ்லாம்'...

கொழும்பிலுள்ள பிரபல ஹோட்டலான கலதாரி மெரிடியனுக்குச் சென்று விட்டனர்.

இதனையடுத்து உயர்பீடம் கூடி இருவரையும நீக்குவதற்கான கட்சித்தலைவர் ரவூப் ஹக்கீமின் முடிவை அங்கீகரித்தது.

இதேவேளை - ஹோட்டல் கலதாரி மெரிடியனில் செய்தியாளர்களிடம் பேசிய அதாவுல்லா, கட்சியின் தவிசாளர் என்ற முடிவில் தான் உயர் பீடத்தைக் கூட்டி, ஹக்கீமை நீக்குவதற்காகத் தொடர்ந்து போராடப் போவதாக அறிவித்துள்ளார்.

## இந்திய...

இவர்கள் இந்தியப் பிரதமரைச் சந்திப்பதற்காக இன்று நேரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இச் சந்திப்பில் இவர்கள் இந்தியத் தலையீட்டின் அவசியத்தை வலியுறுத்துவார்கள் எனவும் தெரியவருகின்றது.

இலங்கை விவகாரத்தில் இந்தியத்தலையீடு அத்தியாவசியமானதென்றும் இது பிராந்திய நலனுக்கு அவசியமானதெனவும் பொதுஜன ஐக்கிய முன்னணி கருத்து வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க கருத்து தெரிவிக்கையில்-

இலங்கை விடயத்தில் இந்தியாவுக்கு முக்கியத்துவம் இருக்கிறது. விடுதலைப் புலிகளோடு எந்த உடன்பாடு வந்தாலும் இந்தியாவைப் பொறுத்தவரை அது பாதிக்கும். இந்தியாதான் மிக நெருக்கமான அண்டைநாடு. இங்கு நடப்பதை இந்தியாவுக்குத் தெரிவிக்க வேண்டும். இந்தியா நடப்பதை அறிந்திருக்க வேண்டும். அமைதி நடவடிக்கை பற்றிக் கவலை, சஞ்சலம் என்பன இந்தியாவுக்கு இருக்கிறது.

அரசாங்கம் வேண்டுமென்றே தனிநாடு அமைப்பதற்கான தளத்தை அமைக்கிறது. புலிகளின் கட்டமைப்பு இப்போதே தனிநாடு அமைவது போன்றிருக்கிறது என்றார்.

# சமாதானத் தீர்வை இந்தியா ஆதரிக்கும்
## மிலிந்தவிடம் ஜஸ்வந்த் சின்ஹா தெரிவிப்பு!

இலங்கையில் வாழும் அனைத்துத் தரப்பு மக்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில், இலங்கையின் இறையாண்மை, ஒற்றுமையைத் தொடர்ந்து பேணக்கூடிய சமாதானத் தீர்வை ஆதரிப்பதாக இந்தியா அறிவித்துள்ளது.

அமைச்சர் மிலிந்த மொறகொட இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவைச் சந்தித்தபோது இது குறித்து தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேலும் இலங்கையின் புனர்நிர்மாணப்பணிகள், மறுவாழ்வு நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் பொருளாதார முயற்சிகளுக்கு இந்திய அரசு சாதகமாகப் பதிலளித்துள்ளது.

ஒஸ்லோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் நடந்த விடயங்களை அமைச்சர் மிலிந்த மொறகொட, வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவைச் சந்தித்துக் கூறியபோதே, இந்தியா மேற்கண்ட உறுதிமொழிகளை வழங்கியுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

## இன்றைய ஒஸ்லோ...

பேச்சுவார்த்தைகளின்போது அமைக்கப்பட்ட உபகுழுககளின் பணிகள் பற்றி மறு ஆய்வு செய்யவிருக்கிறோம். அதில் ஈடுபட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ இங்கே ஒஸ்லோ வந்திருக்கிறார். இந்தக் குழு கடந்த மாதம் ஓமந்தை, முகமாலை ஆகிய இடங்களில் சந்தித்து யுத்த நிறுத்தத்தை ஸ்திரப்படுத்த வலுவான அடித்தளத்தை இட்டிருக்கின்றது. தீவிரப் பிரச்சினைகள் எங்கே தோன்றலாம் என்று கணித்து, மட்டுப்படுத்த நடவடிக்கைகளை இந்தக் குழு எடுத்திருக்கின்றது.

உதவி வழங்கும் நாடுகள் வழங்கிய பணத்தை வைத்து என்னென்ன திட்டங்களைச் செயல்படுத்தலாம், அமைதி ஏற்பட்டதால் இலங்கை முழுவதுமான ஆக்கபூர்வமான திட்டங்களில் இந்தத் தொகையைச் செலவழிக்க என்ன செய்யலாம் என்பதை விவாதிப்போம்.

இலங்கையில் நடந்த போரால் மனிதவலு நிலை பாதிக்கப்பட்டிருக்கின்றது. அதை வலுப்படுத்துவது பற்றியும் பேச இருக்கின்றோம். இது பற்றி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை லண்டனில் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் ஈ.எஸ்.மாட்டீன் அவர்களைச் சந்தித்தேன்.

ஈ.எஸ். மாட்டீன் ஆறு மாதங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் தலைமையுடன் தொடர்பில் இருக்கிறார். அமைதிவழியில் மனித உரிமைகள் பற்றியும் கவனம் செலுத்தவிருக்கிறோம். தாய்லாந்தில் நடக்கவிருக்கும் ஜனவரி பேச்சுவார்த்தையில் இதுபற்றி விரிவாக ஆராயப்படலாம் என்றும் ஜி.எல். பீரிஸ் கூறினார்.

## மரண அறிவித்தல்

### வை.சரவணமுத்து (சாஸ்திரியார்)

*(இளைப்பாறிய ஆசிரியர்)*

சரசாலையைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் கிழக்கை நிரந்தர வசிப்பிடமாகவும் வண்ணார்பண்ணை சிவலிங்கப்புளியடியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வை.சரவணமுத்து நேற்று (01.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் Dr.செல்வி ம.சரவணமுத்து (யாழ். போதனா வைத்தியசாலை - கண் சிகிச்சை நிலையம்), மங்களாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திரு.வ.சிவப்பிரகாசத்தின் மாமனாரும் யதுகுலன், விஷ்ணுகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2002) திங்கட்கிழமை அன்னாரின் தற்காலிக வசிப்பிடத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் பி.ப. 4.00 மணிக்கு தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவலிங்கப்புளியடி,*
*வண்ணார்பண்ணை.* (சி-251)

தகவல்:
Dr.செல்வி ம.சரவணமுத்து

இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.